




வாராந்த மின்னிதழ்

உண்மையின் முகம்

# கல்முனை NET e paper

kalmunainet.com



தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்

பிலவ வருடம் ஆவணி 29 (04.09.2021) இதழ் : 29







# கல்முனை பிராந்தியத்தில் பாதிப்பு வீதம் குறைகிறது!

## தடுப்பூசி ஏற்றலும் மக்களின் ஒத்துழைப்புமே காரணம்



(புவிநேசராசா கேதீஸ்)

கல்முனை பிராந்தியத்தை பொறுத்த வரையில் கொவிட் நோயாளிகளின் எண்ணிக்கைபெருமளவாககுறைந்து செல்வதை அவதானிக்க முடிவதுடன் இழப்புக்களின் விகிதமும் குறைந்து வருகின்றது. மக்கள் தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டமையும் முக்கிய காரணமாக அமைந்துள்ளது ஆகவே ஏற்கனவே தடுப்பூசிகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் தங்களுக்கு விருப்பமான தடுப்பூசிகள் கிடைக்கும்வரை காத்திருக்காமல் முதலில் கிடைக்கும் தடுப்பூசி சிறந்த தடுப்பூசி என்ற வகையில் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் குணசிங்கம் சுகுணன் கல்முனை நெற்றுக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், எதிர் வரும் திங்கட்கிழமையில் இருந்து இரண்டாவது டோஸ் தடுப்பூசி கிடைக்காதவர்களுக்கும்

வழங்கப்பட ஆயத்தம் செய்கின்றோம். இந்தத்

02

## CORONAVIRUS UPDATE

தேசியளவில் கொரோனா பாதிப்பு

உயிரிழப்பு 202

தொற்று 3644

ஐ.நா. ஆணையருக்கு அனுப்பும் ஆவணத்தில் தமிழ்க் கட்சிகள் ஓரணியில் ஒப்பம்!!

# தமிழரசுக்கட்சி இழுத்தடிப்பு

02

## ஊரடங்கு மேலும் 7 நாட்கள் நீடிப்பு

(நமது நிருபர்)

தற்போது நாடு முழுவதும் அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் செப்டெம்பர் 13ஆம் திகதி அதிகாலை 4.00 மணி வரை மேலும் ஒரு வாரத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

02

## பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய உற்சவம் இம்முறை இடம்பெறாது



(புவிநேசராசா கேதீஸ்)

வரலாற்று பிரசித்தி பெற்ற ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கொவிட் நிலைமை காரணமாக இம்முறை இடம் பெறாது.

ஆலய உற்சவம் தொடர்பான கூட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தலைமையில் மேலதிக அரசாங்க அதிபர்

02

## அவசரகால நிலை தனிமனித அதிகாரத்துக்கு வலுச்சேர்க்கும் பாராளுமன்றத்தில் எதிர்த்தே வாக்களிப்போம்



(அரசியல் செய்தியாளர்)

ஜனாதிபதியினால் பிரகடனப் படுத்தப்பட்டு இருக்கும் அவசர காலச்சட்டம், நாட்டில் மிக மோசமானவிளைவுகளைஏற்படுத்தும் என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான சிவஞானம் ஸ்ரீதரன் கல்முனைநெற்றுக்கு தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருட்கள் பதுக்கப்படுவதைதடுப்பதற்கும், பொது மக்களைபாதுகாப்பதற்காகவுமே இந்த அவசரகால சட்டத்தை ஜனாதிபதி பிரகடனப்படுத்தி இருப்பதாக அரசாங்க தரப்பு கூறினாலும், இது நாட்டில் மிக மோசமான சூழ்நிலையை

02

## அவசர கால நிலை ஏற்படுத்தும் தாக்கம்

(நமது அரசியல் செய்தியாளர்)

நாட்டில் ஒரு நெருக்கடி நிலை ஏற்படும்போது அரச வர்த்தமானி மூலம் ஜனாதிபதி அவசர நிலையை பிரகடனம் செய்யலாம்.

- 30 நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.
- 14 நாட்களுக்குள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.
- பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் மாதாமாதம் நீடிக்கலாம்.
- இதன் மூலம், பொலிஸ் முப்படையினருக்கு கூடுதல் அதிகாரம்.
- சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைது செய்யும் அதிகாரம் படையினருக்கு இருக்கிறது.
- தேவை ஏற்படும்போதும் துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கும் படையினருக்கு அதிகாரம்.
- அவசரகால நிலையின் கீழ் விசாரணைகளை துரிதப்படுத்த வேண்டிய அவசியமில்லை.
- ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் நடத்த முடியாது.
- நாடு சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து அவசரகால நிலைமை அவ்வப்போது அமுல்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.
- ஆட்சியிலிருந்த சகல அரசாங்கங்களும் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தியே இருக்கின்றன.
- இதுவரை 444 தடவைகள் பாராளுமன்றத்தில் அவசரகால நிலை நீடிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் சம்பள போராட்டம்:

## அரசின் தீர்மானத்தை இஸ்லாமிய ஆசிரியர் சங்கமும் நிராகரித்தது



(ஏ.எல்.எம்.சலீம்)

ஆசிரியர், அதிபர்களின் போராட்டங்களின் நியாயப்பாடுகளை முழுமையாக விளங்கிக் கொண்டும் அரசு இழுத்தடிப்புச் செய்வதை நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

02

## மட்டக்களப்பு மாவட்டத்தில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவு களுவாஞ்சிக்குடியில் திறப்பு

(வ. சக்திவேல் )

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன் முதலாக பல கோடி ரூபாய் செலவில் கொவிட் நோயாளிகளுக்கான நவீன அதி தீவிர சிகிச்சைப் பிரிவொன்று களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில்

02

நியூசிலாந்தில் 6 பேர் மீது கத்திக்குத்து;

## இலங்கைப் பிரஜை சுட்டுக்கொலை

(நமது நிருபர்)

நியூஸிலாந்தின் ஒக்லண்ட் நகரில் உள்ள பல்பொருள் அங்காடியில் 6 பேர் மீது கத்திக் குத்து தாக்குதலை மேற்கொண்ட இலங்கையைச் சேர்ந்த நபர் (32) அந்நாட்டு பொலிஸாரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ISIS தீவிரவாத அமைப்பின் அடிப்படைவாதங்களால் தூண்டப்பட்ட குறித்த நபர் நியூஸிலாந்தில் கடந்த 10 வருடங்களாக வாழ்ந்து வந்துள்ளார்.

குறித்த நபர் தொடர்பில் சந்தேகம் கொண்ட அந்நாட்டு அரசாங்கம் தொடர்ந்தும் அவரை கண்காணித்து வந்ததாக, அந்நாட்டு பிரதமர் ஜெஸிந்தா ஆர்டன் தெரிவித்துள்ளார்.

02

## மட்டக்களப்பு மாவட்டத்தில் அபாய எச்சரிக்கை! உயிரிழப்பும் தொற்றும் நாளாந்தம் அதிகரிப்பு!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலயத்தில் கொரோனாவினால் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் 199 பேருக்கு தொற்று உறுதி கண்டறியப்பட்டதையடுத்து

02

## கொரோனோ தொற்று: இளம் ஊடகவியலாளர் பிரகாஸ் உயிரிழப்பு



கொரோனாதொற்றுக்குஉள்ளாகிஇளம்ஊடகவியலாளர் பிரகாஷ் சாவகச்சேரியில் நேற்று முன் தினம் காலமானார்.


இறக்கும் போது இவருக்கு வயது 26. கொடிகாமத்தை சேர்ந்த பிரகாஸ், சுயாதீன ஊடகவியலாளராக யாழில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்கு

02

### சாய்ந்தமருதில் வீதிகளில் நடமாடிய 37 நபர்களுக்கு கொவிட் பரிசோதனை;

# மூவருக்கு தொற்று உறுதி





(அஸ்லம் எஸ். மௌலானா)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம். எம். அல் அமீன் றிசாட் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட அணியினரால் இன்று வெள்ளிக்கிழமை 20 நபர்களுக்கு PCR பரிசோதனையும் மேலும் 17 நபர்களுக்கு அண்டிஜென் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது.

அண்டிஜென் பரிசோதனையில் 3 பேர் கொவிட் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டனர்.

20 பேரின் PCR முடிவுகள் நாளை கிடைக்கப்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

'நாட்டின் சட்ட திட்டங்களுக்கு மதிப்பளித்து வீட்டிலேயே இருந்து கொள்ளுங்கள். கொரோணா ஆட்கொள்ளி என்பதை ஒருபோதும் மறந்து விட வேண்டாம்' என்று எச்சரிக்கிறது சாய்ந்தமருது சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.

### பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை...

வே.ஜெகதீசன் முன்னிலையில் நடைபெற்றது.

அம்மனுக்கு மாணிக்கபிள்ளையார்ஆலயத்திலேயே அபிஷேக பூசை நடத்துவதுடன் திரௌபதை அம்மன் ஆலயத்தில் எந்த வெளிச்சடங்குகளும் நடாத்துவதில்லை எனவும் கூட்டத்தில் முடிவுகள் எடுக்கப்பட்டன. ஆலய உற்சவம் எதிர்வரும் ஏழாம் திகதி ஆரம்பமாகவிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்

### ஊரடங்கு மேலும் 7...

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல இதனைத் தெரிவித்தார்.

நேற்று (03) முற்பகல் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கொவிட்-19 ஜனாதிபதி செயலணி கூட்டத்தை தொடர்ந்து குறித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

### மட்டக்களப்பு மாவட்டத்தில்...

திறந்து வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் க.புவனேந்திரநாதன் தெரிவித்தார்.

மேற்படி தீவிர சிகிச்சை பிரிவு கொரனா நோயால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நோயாளிகளை வைத்து அதி தீவிர சிகிச்சையளிக்கும் பிரிவாக இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

### ஆசிரியர் சம்பள போராட்டம்:

சுபோதினி அறிக்கையினை நடைமுறைப் படுத்துவதாக அறிவிக்கும் வரை நமது போராட்டம் ஓய்வடையாது.

இவ்வாறு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள விஷேட அறிக்கையில் தெரிவித்துள்ளது

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜெஸ்மி எம். மூஸா: செயலாளர் எம்.கே.எம். நியார் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மட்டக்களப்பு மாவட்டத்...

மாவட்டத்தில் உயிரிழந்தவர்கள் 226 ஆக அதிகரித்துள்ளதுடன் தொற்றாளர் 16,199 ஆக அதிகரித்துள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர்நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் இன்று வெள்ளிக்கிழமை (3) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

நாளாந்தம் கொரோனா தொற்றாளர் அதிகரித்து வருவதுடன் உயிரிழப்பும் அதிகரித்து வருகின்றது. எனவே பொதுமக்கள் முதலில் தடுப்பூசியை பெற்றுக் கொள்வதுடன் தேவையின்றி வீட்டைவிட்டுவெளியே வரவேண்டாம். அத்துடன், சுகாதார வழிமுறைகளைப் பேணி பாதுகாப்பாக செயற்படுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

### கொரோனோ தொற்று...

கட்டுரைகள், செய்திகள் எழுதி வந்ததுடன், உள்நாட்டு, வெளிநாட்டு இணையத்தளங்களும் செய்திகளை கட்டுரைகளை எழுதி வந்தார்.

அதேவேளை சில இணையத்தளங்களில் செய்தி பதிவேற்றுனராகவும் கடமையாற்றி வந்தார்.

அத்துடன் முகநூலில் உடனுக்கு உடன் உள்நாட்டு, வெளிநாட்டு செய்திகளை பதிவேற்றி வருபவர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் தினம் மாலை திடீரென மூச்சு திணறல் ஏற்பட்டதை அடுத்து , வீட்டார் அவரை வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற போது உயிரிழந்துள்ளார்.

ஆசிரியர் பக்கத் தொடர்ச்சி...

### ஈழத்து ஏதிலிகளுக்கு மறுவாழ்வு...

வாழ்ந்து வருவதாக தமிழக அரசின் புள்ளிவிவரம் கூறுகின்றது.

அதேபோல, 34 ஆயிரத்து 87 பேர் பொலிஸ் நிலையங்களின் கண்காணிப்பின் கீழ், முகாமுக்கு வெளியில் வாழ்ந்து வருகின்றார்கள். தமிழகத்தில் உள்ள இருபத்தி ஒன்பது மாவட்டங்களில் 108 அகதி முகாம்கள் செயல்பட்டு வருகின்றன.

ஒரு யதார்த்தமான உண்மையையும் நாம் இங்கு சொல்லியே ஆக வேண்டும். 40 வருடகாலமாக அகதி முகாம்களில் வாழும் இந்த மக்களில், 55 வீதமானவர்கள் இந்திய மண்ணிலேயே பிறந்தவர்கள். இந்த வரையறைக்குள் வருபவர்களெல்லாம், இலங்கை மண் வாசனையே தெரியாதவர்கள். என்றாலும், இந்திய மண்ணில் பிறந்த இவர்களுக்கும் வாழ்வுரிமையும் இல்லை; குடியுரிமையும் மறுக்கப்பட்டிருக்கிறது என்பது பெரும் கவலைக்குரிய விடயம்.

ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்த ஈழத்தமிழர்களுக்கு பிறந்த குழந்தைகள் எல்லாம், அந்த நாட்டுடமையாக்கப்பட்டு குடியுரிமை பெற்ற நிலையில், தமிழக அகதிகளுக்கு ஏன் இந்த கொடுமையும் அவலமும்.

இந்தியப் பெருந் தேசத்தின் தேசியக் கொள்கையை நாம் கேள்விக்கு உட்படுத்துவது முறையல்ல. அடைக்கலம் கொடுத்து அரவணைத்து வைத்திருப்பதே பெரும் மனிதாபிமானம். தமிழக அரசும் தனது வரையறைக்கு உட்பட்டு அகதிகளுக்கான நலத் திட்டங்களை வகுத்து இருப்பது என்பது திமுகவின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்று.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி தலைமையிலான திமுக ஆட்சியில் யுத்தத்தை நிறுத்த முடியாமல் போனது என்பது தமிழினத்தால் மறக்க முடியாத வடுவாக இருந்தாலும், அவரது அரசியல் வாரிசு ஸ்டாலின் தலைமையிலான புதிய அரசு,அகதித் தமிழர்கள் தொடர்பில் எடுக்கும் இந்த நலன்சார் திட்டங்களால் அகதிகள் வாழ்வில் பேரொளி கிடைக்காவிட்டாலும், உயிர்வாழ வழித்தடமாவது கிடைக்கும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது.

தாயகம் திரும்புவதா? அல்லது தமிழகத்திலேயே வாழ்வதா? இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வாழும்

ஈழத்து உடன்பிறப்புகள்தாங்களாகவே ஒரு முடிவுக்கு வரும்வரை தமிழக முதல்வரின் சமூக நலத்திட்டங்கள் ஒரு தற்காலிக தீர்வாகவே இருக்கும்.

### அவசரகால நிலை தனிமனித அதிகாரத்துக்கு வலுச்சேர்க்கும்....

உருவாக்கும் என்பது தெளிவாக தெரிகிறது என்றும் அவர் கூறினார்.

'நாடு மிக மோசமான நெருக்கடி நிலையில் இருக்கும் போது, அவசரகால நிலையை பிரகடனப்படுத்தி இருப்பது, ஒரு தனிமனித அதிகாரத்துக்கு வலுச் சேர்ப்பதாக இருக்கிறது. இதன்மூலம், தனி மனிதனாக இருக்கின்ற ஜனாதிபதிக்கு தானாகவே முடிவு எடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஒருவரிடம் அதிகாரங்களை குவிப்பது நாட்டின்ஜனநாயகத்துக்கு பாதிப்பான விளைவுகளை ஏற்படுத்தும்' என ஸ்ரீதரன் எம்பி சுட்டிக்காட்டினார்.

அவசரகால நிலையை விசேட வர்த்தமானி மூலம் ஜனாதிபதி பிரகடனப் படுத்தினாலும், அதனை நீடிப்பதற்கு பாராளுமன்றம் தான் அங்கீகாரம் வழங்க வேண்டும்.

இதற்கான பிரேரணை சபையில் கொண்டு வரப்படும் பொழுது, தமிழ் தேசியக் கூட்டமைப்பும் வழமை போன்று அதை எதிர்த்து வாக்களிக்கும் எனவும் அவர் கூறினார்.

### கல்முனை பிராந்தியத்தில் பாதிப்பு வீதம் குறைகிறது!

தடுப்பூசிகள் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை அளவில் கிடைக்க இருக்கின்றது.

பொது மக்களைப் பொறுத்த வரையில் தடுப்பூசிகள் ஏற்றுக் கொண்டவர்களும் சரி 30 வயதிற்கு குறைந்தவர்களும் சரி முகக் கவசங்களை முறையான விதத்தில் அணிந்து கொள்வதும் ஒன்று கூடுவதை தவிர்த்துக் கொள்வதும் இந்த நோயினை வெகுவாக கட்டுப்படுத்துவதற்கு உதவும்.

அரசாங்கம் 30 வயதுக்கு குறைந்தவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை தொடங்கவிருப்பதாக 12 வயதிற்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்குவது சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டு வருவதாலும் இலங்கையின் நிலைமை இந்த வருடத்துக்குள் அதிக அளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும் என நம்புவோம்.

கொரோனா வைரஸ் திரிபடைந்து வருவது சவாலான ஒரு விடையமாக காணப்பட்டாலும் உலக சுகாதார ஸ்தாபனம் ஆனது தொடர்ச்சியாக இதனை அவதானித்து வருகின்றது தடுப்பூசிக்கு கட்டுப்படாத மியூ எனப்படும் திரிபடைந்த வைரஸ் கொலம்பியா நாட்டிலும் தென்னாபிரிக்க நாட்டிலும் ஜனவரி மாதம் தொடக்கம் அவதானிக்கப்பட்டு வருகின்றது

சுற்றுலாத்துறையை பூரணமாக நமது நாட்டில் அனுமதிக்கும் போது இந்த விடயமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்

அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் பொருளாதார நிலைமையில் மோசமான நிலையில் இருப்பதனால் சுற்றுலாத்துறையும் தொழிற்சாலைகளையும் படிப்படியாக பழைய நிலைமைக்கு கொண்டு வருவதை தீர்மானித்து வருவது தெரிந்த விடயமே.

சுகாதாரத் துறையை பொறுத்த வரையில் அரசாங்கத்தின் தேவையை உணர்ந்த வண்ணம் தொழிற்படுவதற்கும் மக்களை பாதுகாப்பாக இந்த தொற்று நோயிலிருந்து பாதுகாப்பதற்கும் திட சங்கற்பம் கொண்டுள்ளோம்

கிழக்கு மாகாணத்தின் புள்ளி விவரங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது கல்முனை சுகாதார பிராந்திய மிகுந்த சிறப்பான விளைவுகளை பெற்றுள்ளது. இந்த வெற்றிக்கு அர்ப்பணிப்பான சுகாதார திணைக்களத்தின் பங்களிப்பு முக்கிய காரணமாக கொள்ளப்பட முடியும்.

### ஐ.நா. ஆணையருக்கு அனுப்பும் ஆவணத்தில் தமிழ்க் கட்சிகள்...

(நமது அரசியல் நிருபர்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளருக்கு தமிழர் தரப்பில் இருந்து ஒருமித்த குரலில் அனுப்புவதற்கு எடுத்த முயற்சிகள் இறுதி நேரத்தில் இழுபறியில் இருப்பதாக தெரியவருகிறது.

மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்புவதற்கு தயார் செய்யப்பட்ட ஆறு பக்கங்களைக் கொண்ட அறிக்கையில் தமிழரசுக்கட்சியை தவிர சகல தமிழ்க் கட்சிகளும் ஓரணியில் ஒப்பமிட்டிருக்கின்றன.

நேற்று இரவு வரையும் ஆவணத்தில் கையொப்பமிடாது இழுத்தடித்துக்கொண்டே வந்த தமிழரசுக்கட்சி, தனியாக ஓர் அறிக்கையை ஐ.நா மனித உரிமை பேரவை ஆணையாருக்கு அனுப்புவதற்கான முயற்சிகளில் இறங்கி இருப்பதாகவும் பிந்திக்கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

என்றாலும், தமிழ்த் தேசியக்கட்சிகள் ஓர் அணியில் செயல்பட்டிருப்பது முக்கிய விடயமாக பார்க்கப்படுகின்றது.

தமிழசுக்கட்சியின் இந்த தனித்த செயற்பாடு தமிழ்க் கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட்டிருக்கிறது என்பதை ஊர்ஜிதமாக்கி இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள இரண்டு கட்சிகளான ரெலோ, புளொட் ஆகியன இந்த ஆவணத்தில் உடடினடியாக ஒப்பமிட்ட நிலையில், தமிழரசுக்கட்சி மாத்திரம் இழுத்தடிப்பு செய்வது உட்கட்சி பூசலை புடம் போட்டு காட்டுவதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆணையருக்கான ஆவணத்தை எதிர்வரும் ஏழாம் திகதி அனுப்புவதற்கு கட்சிகள் மட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, இன்னும் மூன்று தினங்களே இருக்கும் நிலையில் தமிழரசுக்கட்சி தன்னுடைய நிலைப்பாட்டை இன்னும் ஏற்பாட்டாளர்களிடம் உத்தியோக பூர்வமாக தெரிவிக்கவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், புளொட் தலைவர் சித்ததார்த்தன், ரொலோ சார்பில் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் கருணாகரம் (ஜனா), வினோ நோதராதலிங்கம், தமிழ் மக்கள் கூட்டணியில் அங்கம் வகிக்கும் சட்டத்தரணி சிறிகாந்தா, சீ.வி.விக்னேஸ்வரன் உட்பட முக்கியஸ்த்தர்கள் இந்த ஆவணத்தில் கையொப்பம் இட்டுள்ளனர்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ளது. அன்றைய தினமே இலங்கை தொடர்பான வாய்மொழி மூல அறிவிப்பை ஐ.நா மனித உரிமை ஆணையாளர் 'மிச்செல் பச்லெட்' வெளியிட உள்ளார்.

இந்த நிலையில், இலங்கையில் உள்ள தமிழ்க்கட்சிகள் ஓரணியில் அறிக்கை ஒன்றை வெளியிடுவதற்கு அண்மையில் தீர்மானித்திருந்தன. இது தொடர்பில் இணையவழி (சூம்) ஏகோபித்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலை ஒழுங்கமைப்பதில் ரொலோ கட்சி முக்கிய பங்கு வகித்து செயற்பட்டது. தமிழரசுக்கட்சியின்தலைவர் மாவை சேனாதிராஜாவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பியும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டார்கள்.

ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பவது, அரசியல் கைதிகள் விவகாரம், காணி விடுவிப்பு உள்ளிட்ட விடயங்களை தீர்மானங்களாக நிறைவேற்றிய பின்பே, அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதென இந்த கூட்டத்தில் தீர்மானங்கள் எட்டப்பட்டன.

இந்த நிலையில், ஐ.நா மனித உரிமை ஆணையாளருக்கு எழுதும் அறிக்கையை அனுப்பும் பணியை ரொலோ முன்னெடுத்ததோடு, அதன் பிரதிகளை தமிழரசுக்கட்சி உட்பட சகல தமிழ்க் கட்சிகளுக்கும் அனுப்பியும் இருந்தது.

இது தொடர்பாக நாம் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, "இது பற்றி நாம் விரிவாக ஆராய்ந்து வருகின்றோம். எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை" என்றார். அதே நேரம், தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறிதரனுடன் தொடர்பு கொண்ட போது, "எனக்கு எதுவுமே தெரியாது. எங்களுடன் யாரும் இது தொடர்பில் பேசவுமில்லை" என்று அழுத்தம் திருத்தமாக கூறினார்.

இந்த ஆவண தயாரிப்பில் ஈடுபட்ட ரொலோ கட்சியின் செயலாளரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கருணாகரமிடம் வினவியபோது, "ஐ.நாவுக்கு அனுப்புவதற்கு தயாரிக்கப்பட்ட அறிக்கை தமிழரசுக்கட்சி உட்பட சகல தமிழ்க் கட்சிகளுக்கும் நாங்கள் உத்தியோகபூர்வமாக அனுப்பிவிட்டோம். யாரும் கிடைக்கவில்லை என்று கூறுவது அரசியல் நாகரீகமாக இருக்காது" என சுட்டிக்காட்டினார்.

நேற்று இரவு வரை தமிழரசுக்கட்சி ஆவணத்தில் ஒப்பம் இடுவது தொடர்பாக எந்த அறிவிப்பும் வெளியிடாத போதும், தனிப்பட்ட நிபுணர் குழு ஒன்றின் மூலம், தாங்களும் ஒரு அறிக்கையை தயாரிப்பதாக அரசியல் வட்டாரங்களில் தகவல்கள் கசிந்துள்ளன.

கல்முனை NET kalmunainet.com e paper
கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதான வீதி, பாண்டிருப்பு, கல்முனை. இலங்கை.
+94 76 2933026
+94 77 3457915
kalmunainet@gmail.com

குறள் விருந்து

கருவியும் காலமும் செய்கையும் செய்யும் அருவினையும் மாண்டது அமைச்சு.

உரிய கருவி, உற்ற காலம், ஆற்றும் வகை, ஆற்றிடும் பணி ஆகியவற்றை ஆய்ந்தறிந்த செயல்படுபவனே சிறந்த அமைச்சன்.

# ஈழத்து ஏதிலிகளுக்கு மறுவாழ்வு ஒளிக்கீற்று

''கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது என்றால், கடல் கடந்து வாழும் தமிழர்களின் கண்ணீரால்'' என்று அறிஞர் அண்ணா கூறியிருந்தார்.

தமிழக சட்ட சபையில் அதனை ஞாபகம் ஊட்டிய முதல்வர் எம். கே. ஸ்டாலின், தமிழக அகதி முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் சமூக நலத் திட்டங்களை சட்டசபையில் அறிவித்தார்.

தமிழகத்தில் உள்ள 108 அகதி முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர் நலன்களை கவனிப்பதற்காக, 317 கோடி ரூபாவை ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது.

3,510 புதிய வீடுகள், கல்வி மேம்பாடு, இலவச எரிவாயு, இலவச அரிசி, ஆடைகள் உட்பட அடிப்படை வசதி மேம்பாடு என தனித்தனியாக நிதி ஒதுக்கப்பட்டு இருக்கின்றது.

பாதுகாப்பான கௌரவமான மேம்படுத்தப்பட்ட வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க தமிழக அரசு உறுதி பூண்டிருக்கிறது என அறிவித்த ஸ்டாலின், தமிழகத்தின் அகதி முகாம்கள் என்ற சொல்லுக்குப் பதிலாக, ''இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்'' என அழைக்க வேண்டுமென அரச ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்றும் சபையில் அறிவித்தார்.

ஸ்டாலினின் இந்த அறிவிப்பு, உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களை கொஞ்சம் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. இலங்கை தமிழ் அரசியல் தலைவர்கள். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மகனும் அமைச்சருமான நாமல் ராஜபக்ஷவும் தமிழக முதல்வருக்கு பாராட்டையும் நன்றியையும் தெரிவித்து இருக்கிறார்கள்.

உண்மையில், இலங்கை அகதிகளுக்கான தனியான நிதி ஒதுக்கீடுகளையே அவர் சட்டசபையில் அறிவித்திருக்கிறார். இலங்கை வாழ் தமிழர்களையும் புலம்பெயர்ந்து வாழும் உறவுகளையும் தமிழக முதல்வரின் அறிவிப்பு மிகவும் நெகிழ வைத்திருக்கிறது.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தை தொடர்ந்து நடந்த மிலேச்சத்தனமான இனப்படுகொலைகளில் உயிர்தப்பி, கடலில் மிதந்து தொப்புள்கொடி உறவை தேடி சென்றவர்களே இந்த இலங்கை அகதிகள். இதேபோல, ஐரோப்பிய நாடுகளுக்கும் இலட்சக்கணக்கான இலங்கை தமிழர்கள் அகதிகளாக படையெடுத்தனர். சுமார் 40 ஆண்டுகள் கடந்த நிலையிலும், தமிழகத்தில் தஞ்சமடைந்த இலங்கைத் தமிழர்களின் அவலம் கிஞ்சித்தும் நீங்கியதாக இல்லை.

உடுத்த உடையும், உயிரையும் தவிர இவர்களிடம் இழப்பதற்கு ஏதும் இல்லாத ஏதிலிகளாகவே தமிழக உறவுகளிடம் தஞ்சமடைந்தனர்.

அடிப்படையில், வாழ்வுரிமையும் குடியுரிமையும் மறுக்கப்பட்ட நிலையில், கண்ணீரும் கம்பலையுமாகவே 40 வருடங்கள் காலத்தை கழித்து வருகின்றார்கள். தொழிலும் கல்வியும் வாழ்வுரிமைக்கான அடிப்படைகள். 40 வருடங்களாக இவை இரண்டும் அரசாணையின் கீழ் வழங்கப்படவில்லை என்பது இந்த ஏதிலிகளின் உச்ச அவலமாக இருக்கிறது.

ஐரோப்பிய நாடுகளில் அகதி அந்தஸ்து பெற்ற இலட்சக்கணக்கான ஈழத்துச் சொந்தங்கள் எல்லாம், வாழ்வுரிமையும் குடியுரிமையும் பெற்று அந்தந்த நாடுகளில் சுதந்திர பிரஜைகளாக வாழும் போது, நான்கு தசாப்த காலம் ஏதிலி அந்தஸ்தில் வாழ்வது என்பது அடிப்படை மனித உரிமைகள் மீறலாகவே பார்க்கப்படுகின்றது.

1983 - 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 3 இலட்சத்து 4 ஆயிரத்து 269 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழகம் சென்ற டைந்தனர். இவர்களில் 18 ஆயிரத்து 944 குடும்பங்களைச் சேர்ந்த 58ஆயிரத்து 822 பேர் முகாம்களில்

மிகுதி 2ஆம் பக்கம்

# வாழ்வாதாரங்களை கொடுத்து உரிமையை பறிக்க முடியாது

## 12 வருடங்களாகத் கணவரை தேடி அலையும் அமலநாயகி



(சக்தி)

சர்வதேச ரீதியில் காணாமலாக்கப்பட்டவர்களின் தினம் வருடாந்தம் ஒகஸ்ட் 30ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்ற நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 2009. 02. 19 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை தனது கணவன் காணாமலாக்கப்பட்ட நிலையில், அவரைத் தேடி அலைபவர், மட்டக்களப்பைச் சேர்ந்த திருமதி. அமலராஜ் அமலநாயகி.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட ஆயிரக்கணக்கான உறவுகளைத் தேடும் பெண்களில் இவரும் ஒருவர்.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்ட தினத்தையொட்டி இவரைநாங்கள்சந்தித்து உரையாடினோம். கல்முனைநெற்றிடம் திருமதி. அமல்ராஜ் அமலநாயகி மனம் திறந்து பேசுகிறார்;

''பசு இறக்கும்போது கன்றுக்குப் புல்வெட்டி வைப்பதில்லை'' என்ற கிராமத்துப் பழமொழி உள்ளது. அதுபோன்றுதான் எமது வாழ்க்கையும் நகர்கின்றது. குடும்பத்தலைவர் காணாமலாக்கப்பட்டுள்ளபோது தனது பிள்ளைகளைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு தாயவளுக்குச் சுமத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், ஏதோ! தமக்குத் தெரிந்த தொழில்களைச் செய்து கொண்டுதான் தமது வாழ் நாளைக் கடத்தி வருகின்றார்கள்.



> நாங்கள் என்ன பாவத்திலோ அல்லது சாபத்திலோ பிறந்தோமோ எனத்தெரியாது

ஓ.எம்.பி (காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்) சில மறைமுக நிகழ்ச்சி நிரல்களை கொண்டிருந்ததுடன், வலுவற்ற நிலையில் இருந்தமையாலும் நாம் ஓ.எம்.பி ஊடாக வழங்கப்பட்ட 6000 ரூபாவை மறுத்து வந்தோம். நாம் நினைத்ததை போலவே, ஓ.எம்.பி.ஆல் வழங்கப்பட்டு வந்த 6000 ரூபா தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாக அறிகின்றோம்.

எமது உறவுகள் வலிந்து காணாமலாக்கப்பட்டார்கள் என்பதனை ஏற்று, மாதாந்த கொடுப்பனவுகளை சமுர்த்தி ஊடாகவோ அல்லது பிரதேச செயலகங்கள் ஊடாகவோ அரசு வழங்கலாம். வீட்டு திட்டம் போன்றவற்றில் தேவை மதிப்பீட்டின் அடிப்படையில் உதவிகளை வழங்கலாம்,

எமது உறவுகளைத்தேடி இலங்கை அரசிடம் இரந்தும், முட்டி மோதிக் கேட்டும் எமக்கு, இது வரையில எதுவித பதில்களும் இல்லாத பட்சத்தில் தான் சர்வதேச நீதிப் பொறிமுறையை நாங்கள் நாட வேண்டியிருக்கிறது. சர்வதேசம் தலையீடு செய்து எமது உறவுளை மீட்டுத்தர வேண்டுமென்றுதான் எமது போராட்டம் தொடர்கின்றது.

பல இரகசிய முகாம்களில் எமது உறவுகள் பல வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற நம்பிக்கையில்தான் அந்த முகாம்களுக்குச் சென்று பார்ப்பதற்குரிய அனுமதியைக் கோரியிருந்தோம். அது எமக்குக் கிடைத்திருக்கவில்லை. பின்னர்தான், சர்வதேசத்திடம் நாம் எமது உறவுகளை மீட்டுத்தருமாறு கோரியிருந்தோம். முன்னைய ஆட்சியாளர்கள் ஓ.எம்.பி.எனும் அலுவலகத்தை நிறுவி காணாமலாக்கப்பட்ட உறவினர்களுக்கு மரணச் சான்றிதழ், அல்லது காணாமலாக்கப்பட்ட சான்றிதழ்களை கொடுத்து, மாதாந்த கொடுப்பனவுகளையும் வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்கள். அது சர்வதேசத்திற்கு அவர்கள் காட்டிய ஒரு நாடகமாகத்தான் நாங்கள் கருதுகின்றோம்.

சர்வதேசமும் அவர்களுடைய அரசியல் இலாபங்களையும், கருத்திற் கொண்டு எமக்குரிய தீர்வுகளைப் பெற்றுத்தராமல் காலத்தை இழுத்தடிக்கும் செயற்பாட்டில்தான் உள்ளது. இந்நிலையில்தான், தமது உறவுகளைத்தேடி அலைந்த 100 இற்கு மேற்பட்டோர் இறந்துள்ளார்கள். இதனால், சாட்சியங்களும், அழிக்கப்பட்டு வருகின்றன. இது அரசுக்கு இலாபமாகப் பார்க்கப்படுகின்றது.

''நாங்கள் என்ன பாவத்திலோ அல்லது சாபத்திலோ பிறந்தோமோ எனத்தெரியாது''. இருந்தாலும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றில்தான் எமக்குரிய நீதி வேண்டும்.

மட்டக்களப்பு கச்சேரியால் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையின், மாவட்டத்தில் 3589 நபர்களுடைய பெயர்கள் எமக்கும் தரப்பட்டுள்ளன. ஆனாலும், 4000 இற்கு மேற்பட்டோர் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமலாக்கப்பட்டுள்ளார்கள்.

எம்மைத் தூற்றுபவர்களும், போற்றுபவர்களும் இருந்தார்கள். எனினும், எமது போராட்டங்களுக்குச் சமூகம் பெரும் ஆதரவுகளைத்தருகின்றது. ஆனாலும், சமூகத்திலுள்ள பலர் புலனாய்வாளர்களுடன் இருந்து எம்மை ஒரு பயங்கவாதிகளாகச் சித்தரிக்கப் பார்க்கின்றார்கள். இதனால் எமக்கு புலனாய்வாளர்கள் நேர காலம் இல்லாமல் நள்ளிரவிலும், நீதிமன்ற தடை உத்தரவுகளைத் தருவதும், அடிக்கடி நேரடியாகவும், தொலை பேசி மூலமும், தகவல்களைப் பெறுவது, எம்மை சமூகத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கும், ஒதுக்குவதற்கும் உரிய செயற்பாடுகளை செய்கிறார்கள்.

இது ஒரு வேதனைக்குரிய விடையமாகும். எமது உறவுகளைத் தேடும் உரிமைகூட எமக்கில்லையா? என்ற கேள்வி எழுகின்றது.

''வலிமையுள்ள பெண் யார் எனக் கேட்டால், கணவன் காணாமலாக்கப்பட்ட நிலையில் வாழும் பெண்தான் என நான் சொல்வேன்.''

எமது குடும்பங்களுக்கு நிரந்தர வருமானம் கிடைக்கும் வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு குடும்பங்களையும் தனித்தனியாக ஆய்வு செய்து அவர்களுக்கு ஏற்ற வகையில் அரசாங்கமோ, அல்லது அரச சார்பற்ற அமைப்புக்களோ உதவிகளை மேற்கொள்ள வேண்டும். ஆனாலும், வாழ்வாதாரங்களைக் கொடுத்து விட்டு எமது உறவுகளைத் தேடும் உரிமைகளைப் பறிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# தொற்றுள்ள தாய்மாரும் குழந்தைகளுக்கு பாலூட்டலாம்

## உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரை

தாய்ப்பாலூட்டல் ஒரு தாய்க்கான கடமையெனக் கூறப்படுகின்றது. இருப்பினும் , இப்போது புதிய வடிவில் பரவி வரும் கொரோனா தொற்றானது, பாலூட்டும் தாய்மார், மகப்பேற்றுக்கு தயாராகும் தாய்மார் என பலரையும் தாக்கி வருகின்றது.

இந்நிலையில், இதன் தாக்க விளைவுகளும் உயிர் இழப்புக்களும்

புது விதமானது என்பதனால், மக்கள் மத்தியில் பல சந்தேகங்களையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது உண்மையே.

உலக சுகாதார நிறுவனமானது தாய்ப்பாலூட்டலை ஊக்குவித்து வருகின்ற வேளையில் இந்த கொரோனா தொற்றானது ஏற்படுத்திய தாக்கத்தினால் தாய்ப்பால் ஊட்டுவதில் மீண்டும் ஒரு பின்னடைவை எதிர் நோக்கும் என்று கருதவேண்டியுள்ளது.

ப. சந்திரமோகன்

இருப்பினும், உலக சுகாதார நிறுவனமா னது இந்த கொரோனா தொற்று ஏற்பட்ட தாய்மார்களுக்காக பாலூட்டுவதையே பரிந்துரைத்துள்ளது.

இதற்கான காரணங்கள் பல உள்ளன. முதலில் பாலூட்டுவதன் முக்கியத்துவத்தை தாய்மார் உணர்தல் அவசியம்.

மற்றும் கொரோனா தொற்றானது எவ்வாறு பரவுகிறது என்பதையும் தெரிந்து கொள்வது அவசியமாகின்றது.

தாய்ப்பால் மூலம் ஏற்படும் நன்மைகளை அறிந்து கொள்ளுங்கள். ஒரு தாய் பிள்ளைக்கு பால் ஊட்டும் போதும் உடல் உள நல உறவுகள் தொடர்கின்றன. தாயிலுள்ள இயற்கையான நீர்ப்பீடனம் சேய்க்கு பரிமாறப்படுகின்றது. இதனால் நோய்களை எதிர்த்து வளரும் திறனை குழந்தை பெறுகின்றது. அதுமட்டுமல்ல அணைப்பின் மூலம் சேய் மனவலிமை, ஆரோக்கியம் என்பவற்றையும் பெறுவதாக நம்பப்படுகின்றது. இவ்வாறான

தொடர்ச்சி 11ஆம் பக்கம்...



# தமிழர்- முஸ்லிம்கள் இடைவெளியின்றி இணைய வேண்டும்

**கிழக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் எம்.எஸ் .சுபையிர்**

அரசாங்கத்துடன் இணைந்து செல்லும் விருப்பத்துடன், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் பயணிப்பதாகத் தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும், கிழக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சருமான எம்,எஸ் சுபையிர், மட்டக்களப்பு மாவட்டம் குறிப்பாக முஸ்லிம் பிரதேசங்கள் கண்டுகொள்ளப்படாதுள்ளதாகவும் தெரிவித்தார். ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட செயற்பாடுகள் குறித்து ‘கல்முனையில் நெற்’ மின் இதழுக்கு அவர்,வழங்கிய நேர்காணல் இது.

**அரசியலில் பல களங்கள் கண்டவர் நீங்கள்.இந்தப் பயணத்தின் தொடர்ச்சியாக இப்போது அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்திருக்கிறீர்கள்.இதில் உங்களது பார்வை என்ன?**

அரசாங்கத்தைக் கொண்டு வருவதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அளப்பரிய பங்காற்றியிருக்கிறது. இந்தப் பங்களிப்புக்களுக்கான சன்மானங்கள் மட்டக்களப்பு மாவட்டத் தைப் பொறுத்தவரை திருப்திப்படு மளவில் இல்லை.இவ்வாறு சில சன்மானங்கள்,சலுகைகளைத் தருவதற்கு அரசாங்கம் முன்வந்தாலும்,சில அரசியல் தலையீடுகள் தடைகளை ஏற்படுத்துவதாகவே நான் கருதுகிறேன். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரது கடிதத்தைக் கொடுத்து வீதி அபிவிருத்திகளைத் தருமாறு கோரினாலும்,மாவட்ட எம்.பிக்களின் அனுமதிக் கடிதத்தை தருமாறு திருப்பியனுப்புகின்றனர். எனினும் எமது கட்சி உத்தரவிட்டுள்ளதால், இதுபற்றிப் பணிகளைத் தொடர்கிறோம்.

**அவ்வாறு தடைகள் ஏற்படுத்தும் சக்திகளை அடையாளம் கண்டுள்ளீர்களா?**

பதில்இதற்குப் பின்னாலுள்ள அரசியல் சக்திகளை நான் அடையாளம் கண்டுவிட்டேன், எனினும் எனக்கிருக்கின்ற சமூகப் பொறுப்பும்,நான் விரும்புகின்ற சமூக நல்லிணக்கமும் இதை வெளிப்படையாகச் சொல்வதை விரும்பவில்லை. அரசியலுக்காகப் பிரிக்கப்பட்டிருக்கின்ற தமிழ் பேசும் சமூகங்கள், இடைவெளியில்லாது இணைக்கப்பட வேண்டுமென்று விரும்புகின்றவன் நான்,இதற்கான அரசியல் பாதையைத் தேடியே நான் பயணிக்கிறேன்.ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இலட்சியங்களால் சமூக உறவுகளைச் சாத்தியமாக்க முடியுமென்பது எனது நம்பிக்கை.

**இரண்டு தசாப்த அரசியலில் ஏறாவூர் பிரதேச மக்கள் உங்களுக்கு அங்கீகாரம் வழங்கியே வருகின்றனர்.இந்தப் பிரதேசத்தில், இப்போது அவசரமாகச் செய்யப்பட வேண்டிய பணிகள் எவை?**

செய்யப்பட வேண்டிய பணிகள் பல இருக்கின்றன.இருப்பினும் இன்றைய சூழலில், கொரோனாத் தொற்றில் உயிரிழந்தோர்,பாதிக்கப் பட்டோருக்குத்தான் உதவ வேண்டி உள்ளது.இதையும் விட,சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப் பட்ட ஏறாவூர் பொதுச் சந்தையின் நிர்மாணப்பணிகள் இன்னும் நிறைவடையாது இடைவிடைப்பட்டுள்ளன,இப்பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதுதான் எனது கனவு.

**விரைவில் நடைபெறச் சாத்தியமான தேர்தல் எதுவென எதிர்பார்க்கிறீர்கள்?அவ்வாறு, ஏதாவது தேர்தல் நடைபெற்றால் போட்டியிடும் எண்ணம் இருக்கிறதா?**

பதில்மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் தான் அதிகரித்து வருகின்றன. ஜெனிவாத் தீர்மானங்களின் அழுத்தங்களைச் சமாளிப்பதற்கும் இந்தத் தேர்தலை நடத்துவதுதான் சரியான வியூகமாக அமையும். அதிகாரப்பகிர்வின் அடிப்படை அம்சமான மாகாண சபைகளை நடத்தாமலிருப்பது வெளிநாடுகளின் தேவையில்லாத தலையீடுகளை ஏற்படுத்துமென்பது அரசாங்கத்துக்குத் தெரியாததா!எனவே,மாகாண சபைத் தேர்தல்தான் நடைபெறச் சாத்தியமானது எனக் கருதலாம்.அவ்வாறு, தேர்தல் நடந்தால் போட்டியிடும் தீர்மானமுள்ள துதான்,எனினும் அன்றைய சூழலைப் பொறுத்தே முடிவுகள் அமையும். கட்சியை விடவும் நமது சமூகங்களின் நலன்தான் பிரதானமானது.இந்த இலட்சியத்தை மையப்படுத்தியதாகவே எனது தீர்மானமிருக்கும்.

**எதிர்காலத்தில், சிறுபான்மை அரசியலால் எதையாவது சாதிக்கக் கூடியதாக இருக்குமா?**

சார்ந்து செல்லும் அரசியலை தவிர,வேறு எந்த வியூகங்களாலும் தமிழ்,முஸ்லிம் சமூகங்களுக்கு சாதிக்க முடியாமல்தான்போகும். பெரும்பான்மையினரின் விருப்புக்களுக்கு எதிரான அரசியலும், வெறும் வெற்றுக் கோஷங்களாகவன்றி,வெற்றிக் கோஷங்களாகவோ,உரிமை அரசியலாகவோ மாறப்போவதும் இல்லை என்பதும்தான் இன்றைய சூழலில் யதார்த்தமாகி வருகிறது.

**பேட்டி கண்டவர் – முயலகன்**

# கூத்துக் கலையை நாளைய சந்ததியினரிடம் ஒப்படைக்க வேண்டியது எமது தலையாய கடமை

## கலைக்கோட்டன் அ. இருதயநாதன்

தமிழர்களின் பாரம்பரிய கலை வடிவங்களுள் ஒன்றான கூத்துக் கலையை பாதுகாத்து அதனை எமது நாளைய சந்ததியினரிடம் ஒப்படைக்க வேண்டிய தலையாய கடமை எம் மத்தியல் வாழும் தமிழ்க் கலைஞர்களுக்குரியதாகும். இப்பணியை எனது இறுதி சுவாசக் காற்று உள்ளவரை தொடர்வேன் இவ்வாறு மட்டக்களப்பில் வாழ்ந்து வரும் இலக்கியவியலாளரும் ஓய்வு நிலை அதிபரும், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் சாரண ஆணையாளருமான கலைஞானி, கலைக் கோட்டன் அழமையா இருதயநாதன் கல்முனை நெற்றுக்கு வழங்கியசெவ்வி

**நேர்காணல் செ.பேரின்பராசா**

**முதலில் உங்களைப் பற்றி எமது வாசகர்களுக்கு சுருக்கமான கூறுங்கள்?**

மட்டக்களப்பு மாவட்டத்தின் பேராறு வங்கக் கடலுடன் கலக்குமிடம் முகத்துவாரம் இதிலமைந்துள்ளதே பாலமீன்மடு எனும் அழகிய கடலோரக் கிராமமாகும். இயற்கைவனப்பு மிக்க இக் கிராமத்தைச் சேர்ந்த பொன்னையா ஜோசப் அழகையா ஜோன் பீற்றர் திரேசா பூரணம்மா தம்பதியினரின் மூத்த மகனாகப் பிறந்தேன். எனது ஆரம்பக் கல்வியை பால மீன்மடு மெதடிஸ்த மிஸன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும். பின்னரான கல்வியை மட்டக்களப்பு மாநகரிலுள்ள பிரபல கல்லூரியாகிய புனித மிக்கேல் கல்லூரியில் கற்றேன். 1975ஆம் ஆண்டு ஆசிரியராக அரச சேவையில் இணைந்து கொண்டேன். 1975 முதல் 1988 வரையும் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினேன். 1989 முதல் பாடசாலை அதிபராக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலுள்ள நரிப்புல்தோட்டம் நடேஸ்வரா தமிழ் வித்தியாலயம் மகிழவட்டவான் மகாவித்தியாலயம், மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள பாலமீன்மடு விக்னேஸ்வரா வித்தியாலயம், மட்டக்களப்பு புனித செபஸ்தியார் தமிழ் வித்தியாலயம், மடடக்களப்பு புனித திரேசா மகளிர் தமிழ் வித்தியாலயம் என்பவற்றில் பணியாற்றி 2009இல் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றேன்.



**பிறப்பால் கிறிஸ்தவரான நீங்கள் பல சைவ புராண நாடகங்களை எழுதி அதில் கதாநாயகனாக நடித்து மேடையேற்றியுள்ளமை பற்றி கூற முடியுமா?**

நல்ல கேள்வி கலைத்துறையில் இருப்பவர்கள் யாராக இருப்பினும் இனம், மதம், பார்க்க கூடாது. அவர்களுடைய பார்வை கலையுணர்வாகவே இருக்க வேண்டும். இந்த வகையில் மார்க்கடேயர் சரிதை சொல்லும் காலனை வன்றான் சூரசம்ஹாரம் குறிக்கும் ஷஷவினை தீர்த்த வேலவன் ஆகிய இரண்டு நாடகங்களும் தலா பதின்மூன்று தடவைகள் மேடையேற்றப்பட்டன. இவை தவிர இரண்டு தடவை மேடையேற்றப்பட்ட பக்த பிரகலாதா கண்ணப்பநாயனார்நாடகம் என்பவற்றை குறிப்பிடலாம்.

**அப்படியாயின் உங்களால் எழுதப்பட்டு நடித்த மேடையேற்றப்பட்ட கிறிஸ்தவ நாடகங்களை குறிப்பிட முடியுமா?**

கிறிஸ்துவின் பிறப்பு, வாளெடுத்தவன், வாழ்வின் மறுபக்கம், தியாகத்தின் இரவு, சிலுவையே சிகரம், கிறிஸ்துவின் இரவு, கல்வாரிப் பூக்கள், உயிர் கொடுத்த உடன்படிக்கை, அலைகளிலும் ஆண்டவன், உறங்காத இரவுகள், பச்சை மரத்தில் பற்றிய தீ, அறியாமல் செய்கின்றார்கள் என்பனவாகும்.

**உங்களால் எழுதப்பட்ட இலக்கிய நாடகங்கள் பற்றி கூற முடியுமா?**

சிலம்புச் செல்வி (கோவலன் கண்ணகி சரிதை) அரிச்சந்திரா, கழுமரம் வென்ற காலன் (காத்தவராயன் சரிதை) கங்கையைத் தேடிய மங்கை (கண்டிய மன்னன் பூசனியாள் சரிதை) என்பனவாகும்.

**இதேபோன்று நீங்கள் எழுதிய வரலாற்று நாடகங்கள், சமூக நாடகங்கள் பற்றி கூற முடியுமா?**

# ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் 1020 குடும்பங்களுக்கு ரூ2000 கொடுப்பனவு

**வி.சுகிர்தகுமார்**

எந்தவொரு மாதாந்த உதவிப் பணமும் பெறாத குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்காக அரசாங்கம் ரூ2000 பணத்தை தொடர்ந்தும் வழங்கி வருகின்றது. இதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 22 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட 1020 குடும்பங்களுக்கு இதுவரையில் அரசின் உதவிப் பணம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் ஆலோசனைக்கு அமைவாக கிராம மட்ட கள உத்தியோகத்தர்கள் வீடு வீடாகச் சென்று அரசின் பயணத்தடை கால உதவித் தொகை பணத்தினை வழங்கி வருவதுடன் உத்தியோகத்தர்களின் அலுவலகங்களிலும் வழங்குகின்றனர்.

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் அரசின் சுற்று நிருபத்திற்கு அமைவாக அரசிடமிருந்து எந்தவொரு மாதாந்த உதவிப் பணமும் பெற்றுக் கொள்ளாத சுமார் 2064 வறிய குடும்பங்களில் முதல் கட்டமாக 1020 குடும்பங்களுக்கு பணம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

# முதலிடம் பிடித்தார் சாணக்கியன் எம்.பி.



**(ஏ.எல்.எம்.சலீம்)**

நாடாளுமன்றத்தில் சிறப்பாக செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தர வரிசையினை "மந்திரி எல்கே" எனும் இணையத்தளம் வெளியிட்டு வருகின்றது. இந்நிலையில் தற்போது புதிய தரப்படுத்தல் பட்டியலை குறித்த இணையத்தளம் வெளியிட்டுள்ளது. புதிய இந்ததரப்படுத்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் முதலிடத்தினைப் பிடித்துள்ளதுடன் அமைச்சர் சரத் வீரசேகர இரண்டாவது இடத்தினையும், புத்திக பத்திரன மூன்றாவது இடத்தினையும் பிடித்துள்ளனர். முதலிடத்தினைப்பிடித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

# பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்தால் மட்டுமே அவசரகால நிலையை பிரகடனப்படுத்தலாம்




நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருந்தால் மாத்திரமே, அவசர கால சட்டத்தை பயன்படுத்த முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கின்றார்.

அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகத்திற்கான அவசரகால நிலைமை அறிவிப்பு வெளியிடப்பட்டதை அடுத்து, விசேட அறிவிப்பொன்றின் ஊடாக, சுமந்திரன் இதனைக் குறிப்பிட்டுள்ளார். பொதுமக்கள் சுகாதார நிலைமையை அடிப்படையாகக் கொண்ட,சட்டமொன்று நாட்டில் உருவாக்கப்பட வேண்டும் என தாம் வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

இதன்படி, சுகாதார நிலைமையை அடிப்படையாகக் கொண்ட, சட்டம் உருவாக்குவதற்கான தனிநபர் பிரேரணையொன்றை தான் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

# சுகாதாரஅமைச்சின் முன்னாள் செயலாளர் திசநாயக்காவின் மறைவு பேரிழப்பு!

**கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன்**



**( வி.ரி.சகாதேவராஜா)**

சுகாதாரஅமைச்சின் முன்னாள் செயலாளரும் இலங்கை நிருவாகசேவையின் சிறப்பு அதிகாரியுமான பி.திசாநாயக்கவின் மறைவு நாட்டிற்கு பேரிழப்பாகும். என்று த.தே.கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபை உறுப்பினரும், சமூகசெயற்பாட்டாளருமான சந்திரசேகரம் ராஜன் விடுத்துள்ள அனுதாப அஞ்சலிக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

ஹங்குரான்கெத்த பிரதே செயலாளராக ,நிருவாக சேவையில் இணைந்த காலஞ்சென்ற திசாநாயக்க முன்னாள் சுகாதாரஅமைச்சு, விளையாட்டுத்துறை அமைச்சு, மீன்பிடித்துறை அமைச்சு ஆகியவற்றின் செயலாளராகவும், திறைசேரியின் செயலாளராகவும் நாட்டிற்கு அளப்பரியசேவையாற்றியிருந்தார். அவர் தனது 63வது வயதில் நேற்றுமுன்தினம்(1) அவர்வாழ்ந்த கண்டியில் காலமானார்.

அவர் தொடர்பான அனுதாபக்குறிப்பில் உறுப்பினர் ராஜன் மேலும் தெரிவித்ததாவது:

சுகாதார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சில் செயலாளராக அவர் இருந்த காலத்தில் கல்முனைக்கு அபிவிருத்தித்திட்டங்களுக்கு நிதியொதுக்கி இனமதபேதமற்ற சேவையாற்றியிருந்தார். கல்முனை ஆதாரவைத்தியசாலையின் வளர்ச்சியிலும் அவரது பங்களிப்பு இருந்திருக்கிறது. விளையாட்டு மைதானங்கள் அபிவிருத்தியில் அவரது கணிசமான பங்களிப்பு இருந்தது. பழகுவதற்கு இனிமையான பண்புள்ள திசாநாயக்க பூவுலகைவிட்டு பிரிவாரென்று கனவிலும்நினைத்திருக்கவில்லை. அன்னாரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்தஅனுதாபத்தை தெரிவிக்கிறேன்.

# க.பொ.த உ\த, புலமைப்பரிசில் பரீட்சை மாணவருக்கான அறிவிப்பு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களை இணையத் தளத்தின் ஊடாக மாத்திரம் விண்ணப்பிக்க முடியும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. நாட்டில் நிலவும் கொவிட் தாற்று நோயைக் கருத்திற்கொண்குறித்த பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கும் கால எல்லை எதிர்வரும் 15ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது..

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை www.donet.lk என்ற இணையத்தளத்தில் அறிந்துகொள்ள முடியும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# கேரளா கஞ்சாவுடன் சாய்ந்தமருதில் பொலிஸாரால் ஒருவர் கைது !

**பாறுக் ஷிஹான்**

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட பொலிவேரியன் கிராமத்தில் 135 கிராமுடன் குறித்த இளைஞனை நேற்று(03) மதியம் கல்முனை விசேட பிரிவின் தகவலுக்கமைய சாய்ந்தமருது பொலிஸார் கைது செய்துள்ளனர்.



நீண்ட காலமாக குறித்த இளைஞன் கேரளா கஞ்சாவினை விற்பனை செய்து வருவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய கல்முனை விசேட பிரிவினர் வழங்கிய தகவலை அடுத்து துரிதமாக செயற்பட்ட சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல். சம்சுதீன் தலைமையிலான குழுவினர் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய 30 வயதுடைய இளைஞனை கைது செய்ததுடன் அவர் வசம் இருந்த 135 கிராம் கேரளா கஞ்சாவினையும் மீட்டுள்ளனர்.

மேலும் இவ்வாறு கைதாகிய சந்தேக நபர் உட்பட அவர் வசம் மீட்கப்பட்ட சான்று பொருட்கள் சகிதம் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சாய்ந்தமருது பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மட்டு வவுணதீவு வயல்பகுதில் 3 கைக்குண்டுகள் மீட்பு

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள பாவக்கொடிச்சேனை கற்பகேணி வயல் பகுதியில் கைவிடப்பட்டிருந்த 3 கைக்குண்டுகளை நேற்று வியாழக்கிழமை (02) மீட்டுள்ளதாகவும் இதனை வெடிக்க வைத்து செயலிழப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக பொலிசார் தெரிவித்தனர். பொலிசாருக்கு கிடைத்த தகவல் ஒன்றியை குறித்த வயல்பகுதியில் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து நேற்று மாலை இந்த கைக்குண்டுகளை மீட்கப்பட்டதுடன் இதனை வெடிக்க வைப்பதற்கான நீதிமன்ற உத்தரவை பெற்று இன்று வெள்ளிக்கிழமை வெடிக்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.



# ஈழ அகதி முகாம்களில் தொடரும் அவலம்

## மறு வாழ்வுக்கு வித்திடும் முதல்வரின் சமூக நலத் திட்டம்

இலங்கையில் தமது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழும் காலமாக அக்காலம் இருந்தது. எப்போது எங்கெங்கல்லாம் வான்மழைக்குப் பதிலாக குண்டுமழை பொழியும் என அச்சத்தில் இருந்த காலம் அது. செல் வீச்சுக்களுக்கும், குண்டுச்சத்தங்களுக்கும் மத்தியிலும், இரத்தம் தோய்ந்த 1983 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மக்கள் எங்காவது ஓடிச் சென்று தமது உயிரைக் காப்பாற்றிவிடலாம் என்ற நிலையில் தான் வாழ்ந்தார்கள்.

இக்கட்டான நிலையில் இருந்த மக்கள், படகுகள், வள்ளங்கள் மூலமும், இன்னும் சிலர் விமானங்கள் வழியாகவும், அண்டைநாடான இந்தியாவிற்குத் தப்பிச் சென்றிருந்தனர். எனினும், அவ்வாறு அங்கு சென்ற மக்கள் இன்னும்தமிழ்நாட்டில் உள்ள அகதி முகாம்களில் அல்லல்படுகின்றனர்.

## முதல்வர் ஸ்டாலினின் அறிவிப்புக்கு அமைச்சர் நாமல், தமிழ் தலைவர்கள் பாராட்டு

அந்த முகாம்களில் வாழ்ந்த சிலர் கடந்த ஒரு சில வருடங்களில் தாயம் திரும்பியுள்போதிலும், அவர்களுக்கு உரிய வசதிவாய்ப்புக்கள், ஏற்படுத்திக் கொடுக்கவில்லை எனவும் அங்கலாய்க்கின்றனர். சுமார் 40 ஆண்டுகள் கடந்த நிலையிலும், தமிழகத்தில் தஞ்சமடைந்த இலங்கைத் தமிழர்களின் அவலம் கிஞ்சித்தும் நீங்கியதாக இல்லை.

உடுத்த உடையும், உயிரையும் தவிர இவர்களிடம் இழப்பதற்கு ஏதும் இல்லாத ஏதிலிகளாகவே தமிழக உறவுகளிடம் தஞ்சமடைந்தனர்.

அடிப்படையில், வாழ்வுரிமையும் குடியுரிமையும் மறுக்கப்பட்ட நிலையில், கண்ணீரும் கம்பலையுமாகவே 40 வருடங்கள் காலத்தை கழித்து வருகின்றார்கள். தொழிலும் கல்வியும் வாழ்வுரிமைக்கான அடிப்படைகள். 40 வருடங்களாக இவை இரண்டும் அரசாணையின் கீழ் வழங்கப்படவில்லை என்பது இந்த ஏதிலிகளின் உச்ச அவலமாக இருக்கிறது.

ஐரோப்பிய நாடுகளில் அகதி அந்தஸ்து பெற்ற இலட்சக்கணக்கான ஈழத்துச் சொந்தங்கள் எல்லாம், வாழ்வுரிமையும் குடியுரிமையும் பெற்று அந்தந்த நாடுகளில் சுதந்திர பிரஜைகளாக வாழும் போது, நான்கு தசாப்த காலம் ஏதிலி அந்தஸ்தில் வாழ்வது என்பது மிகவும் பரிதாபமான நிலை ஆகும்.

1983 ~ 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 3 இலட்சத்து 4 ஆயிரத்து 269 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழகம் சென்றடைந்தனர்.இவர்களில் 18 ஆயிரத்து 944 குடும்பங்களைச் சேர்ந்த 58ஆயிரத்து 822 பேர் முகாம்களில் வாழ்ந்து வருவதாக தமிழக அரசின் புள்ளிவிவரம் கூறுகின்றது. அதேபோல, 34 ஆயிரத்து 87 பேர் பொலிஸ் நிலையங்களின் கண்காணிப்பின் கீழ், முகாமுக்கு வெளியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

40 வருடகாலமாக அகதி முகாம்களில் வாழும் இந்த மக்களில், 55 வீதமானவர்கள் இந்திய மண்ணிலேயே பிறந்தவர்கள். இந்த வரையறைக்குள் வருபவர்களெல்லாம், இலங்கை மண் வாசனையே தெரியாதவர்கள்.

ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்த ஈழத்தமிழர்களுக்கு பிறந்த குழந்தைகள் எல்லாம், அந்த நாட்டுடமையாக்கப்பட்டு குடியுரிமை பெற்ற நிலையில், தமிழக அகதிகளுக்கு ஏன் இந்த கொடுமையும் அவலமும்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி தலைமையிலான திமுக ஆட்சியில் யுத்தத்தை நிறுத்த முடியாமல் போனது என்பது தமிழினத்தால் மறக்க முடியாத வடுவாக இருந்தாலும்,அவரது அரசியல் வாரிசு ஸ்டாலின் தலைமையிலான புதிய அரசு,அகதித் தமிழர்கள் தொடர்பில் எடுக்கும் இந்த நலன்சார் திட்டங்களால் அகதிகள் வாழ்வில் பெரும் திருப்பம் ஏற்படும் என்பதே எதிர்பார்ப்பாகும். தாயகம் திரும்புவதா? அல்லது தமிழகத்திலேயே வாழ்வதா? இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வாழும் ஈழத்து உடன்பிறப்புகள் தாங்களாகவே ஒரு முடிவுக்கு வரும்வரை தமிழக முதல்வரின் சமூக நலத்திட்டங்கள் ஒரு தற்காலிக தீர்வாகவே இருக்கும்.

ஆனாலும், தற்போது தமிழக முகாம்களில் தங்கியிருக்கும் மக்களில் பலர் மீண்டும் தாயகம் திரும்புவதற்கு விரும்புவதாக தகவல்கள் கூறுகின்றன.

எது எவ்வாறு அமைந்தாலும், தமிழகத்தில் உள்ள அகதிமுகாம்களின் நலன்களை கவனிப்பதற்காக 317 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி உள்ளதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருக்கிறார். இதன் மூலம், தொழில், கல்வி, இலவச அரிசி,இலவச சமையல் எரி வாயு, முகாம்களில் நவீன வீடுகளை அமைத்துக் கொடுத்தல் உட்பட இன்னும் ஏராளமான சலுகை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என அவர் அறிவித்திருக்கிறார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் கடந்த வாரம் விடுத்த அறிவிப்பு. ழூ இலங்கை அகதிகளின் கண்ணீரைத் துடைக்கக்கூடிய வகையில் முகாம்களில் குடிநீர் வசதி உள்ளிட்டவற்றை ஏற்படுத்த 30 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். ழூ இலங்கை அகதிகள் முகாம்களின் அடிப்படை கட்டமைப்புகளுக்கு இனி ஆண்டுதோறும் 5 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்திற்குப் பிறகு, ஈழத் தமிழர்கள் கடல் கடந்து தமிழ்நாட்டிற்கு வரத் தொடங்கினார்கள். அத்தகைய தமிழ் மக்களை அன்று முதல் இன்று வரையிலும் நாம் அரவணைத்துக் காப்பாற்றி வருகிறோம். அவர்களுக்கு வாழ்வாதாரமும் வழங்கி வருகிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற தருணங்களில் எல்லாம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இலங்கைத் தமிழர்களின் நலனில் எப்போதும் அக்கறை கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, கடந்த 1997~1998 ஆம் ஆண்டில், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு, 2 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 3 ஆயிரத்து 594 புதிய வீடுகள், தலா 5 ஆயிரத்து 750 ரூபாய் செலவில் கட்டிக் கொடுக்கப்பட்டன.

கடந்த 2~11~2009 அன்று 'இலங்கை அகதிகள் முகாமில் உள்ள அடிப்படைத் தேவைகள்' குறித்த ஒரு ஆய்வுக் கூட்டத்தை முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நடத்தியிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிந்து அடைக்கலம் கோரி தமிழகத்திறகுச் சென்ற எமது நாட்டு மக்களின்மீது,அதீத அக்கறை கொண்டு அவர்களுக்கு நிதி ஒதுக்கீடுகளையும் மேற்கொண்டுள்ள தமிழகத்தின் புதிய முதலமைச்சருக்கு இலங்கையின் மக்கள் பிரதிநிதிகளும் தத்தமது கருத்துக்ளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளனர்.

**இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச.**

யுத்தக்காலத்தில் வெளிநாடுகளுக்கு அகதிகளாக சென்று, நாடு திரும்ப விரும்பும் அகதிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதாக இலங்கை அகதிகளுக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிறப்புரிமைகளை அறிவித்துள்ள நிலையில், இலங்கைக்கு மீள வருகைதரும் அகதிகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதாகவும் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ. தனது டுவிட்டர் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.



சிரேஷ்ட ஊடகவியலாளர்
-வ.சக்திவேல்-

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்....



# முல்லைதிவ்யனின் மொழிபெயர்ப்பு நூல்

## தன்னம்பிக்கையின் ஆளுமை வெளிப்பாடு

ஆனந்தமயில் முல்லைதிவ்யன் முல்லைத்தீவின் செல்வபுரத்தில் பிறந்து தற்போது யாழ்ப்பாணத்தின் பொலிகண்டியில் வசித்து வருபவர். ஆரம்பகல்வியை கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்திலும் இடைத்தரக் கல்வியை யா/பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையிலும் சாதாரண தரத்தை யா:விக்னேஸ்வரா கல்லூரியிலும் உயர் தரத்தை யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்று தற்போது திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை படித்து வருகின்றார். ஆனந்தமயில் நகுலேஸ்வரி தம்பதிகளின் மகனான இவருக்கு ஐந்து சகோதரர்களும் ஒரு சகோதரியும் உண்டு.

இவரது தந்தையார் ஓர் எழுத்தாளராக இருந்த காரணத்தால் நிறைய புத்தகங்களை வீட்டிலே படிக்கும் சந்தர்ப்பம் அதிகம். அப்பா கவிதைகளையும்,பாடல்களையும் எழுதிவிட்டு இவருக்கு வாசித்துக் காட்டுவார். அப்போதிலிருந்தே இவருக்கும் கவிதைகள், சிறுகதைகள், பாடல்கள் எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. பாடசாலைக் காலத்தில் தமிழ்மொழித்தின போட்டிகள், வாணி விழா போட்டிகளில் ஆர்வமாக கலந்து கொண்டு வெற்றிபெற்றார். பாசாலைக் காலத்தில் தமிழ் ஆசிரியர் திருமதி சிவராமலிங்கம் அவர்களின் தட்டிக்கொடுப்பும் பின்னூட்டல்களும் இவர் எழுத்துதுறையில் கால்பதிக்க காரணமாக அமைந்தது.

இதுவரை நல்லதோர் கனவும் அந்தரிப் போரும், கவியின் ஏக்கம், அம்மா காத்திருக்கக் கூடும், அக்காவுக்கு எழுதிய கடிதம், முல்லைநிலமும் நந்திக்கடலும், வள்ளிபுனத்து ஆலமரம்,
கொக்கு தொடுவாய் கொக்குகளும் கூளாமுறிப்பு பாலைகளும் ஆகிய ஏழு கவிதைத் தொகுதிகளையும் தாய்நிலம் முதலாம் இரண்டாம் பதிப்பு என இரண்டு சிறுகதைத் தொகுதிகளையும் ஒரு மொழிபெயர்ப்பு நூலையும் வெளியிட்டுள்ளார்.

கலாச்சார திணைக்களம் ஒவ்வொரு ஆண்டும் நடாத்துகின்ற அரச கலை இலக்கியப்போட்டிகளில் சிறுகதை, கவிதை, பாடலாக்கம், சிறுவர்கதை, இலக்கிய விபரணம் போன்ற போட்டிகளில் பிரதேச மட்டம்,மாவட்ட மட்டம், தேசிய ரீதியில் ஐம்பதுக்கு மேற்பட்ட வெற்றிச் சான்றிதழ்களை பெற்றுள்ளார். அதே போல ஆங்கில மொழி மூலம்,சிங்கள மொழி மூலமும் பங்கு பற்றி பல வெற்றிச் சான்றிதழ்களை பெற்றுள்ளார். அதைவிட இவரது கலைப் பயணத்தில் **“கலைத்தளிர்” “இளங் கலைஞர்”** ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார். ஒரு நூலை வெளியிடுவதே கடினமான காலத்தில் தனது தன்னம்பிக்கையாலும் விடாமுயற்சியாலும் தனது சொந்த பணத்தில் 9 படைப்புகளை வெளியிட்டுள்ளார். பத்தாவது புத்தகம் மட்டும் பொலிகை இணையத்தின் அனுசரணையுடன் அண்மையில் வெளிவந்தது.

**“அக்காவுக்கு எழுதிய கடிதம்” என்ற கவிதை நூலில் எழுதிய ஈழத்தின் வளங்களை குறிபிட்டு சொல்லுகின்ற கவிதை ஒன்றை “எங்கள் தமிழ் தேசம்..” என பாடலாக்கி முகநூலில் வெளியிட்டார். இரண்டு மாதங்களிலே பல இலட்சம் பார்வையாளர்களை கடந்தது. இதுவே இவருக்கு பாடலாசிரியர் என்ற அந்தஸ்தையும் கடந்தது.**

**இதைவிட “தாய்நிலம் “என்ற** சிறுகதைத்தொகுப்பு 2016 இல் யாழ் பிரெஞ்சு நட்புறவுக் கழகத்தின் மூலம் சிங்களம், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு பெரும் வரவேற்பை பெற்றிருந்தது. பலவழிகளில் தன்னை வளர்த்து அர்ப்பணிப்புடன் கலைத்துறையில் பயணிக்கும் முல்லைதிவ்யனின் பயணம் சிறப்பாய் அமைய வாழ்த்துக்கள்.



# ஊடக இலக்கிய உலகில் வளர்ந்து வரும் அஸ்கா

இளம் கலைஞர் அறிமுகம்

கு.கிலசன்




மாவனல்லை அரனாயக தல்கஸ்பிடியவை வசிப்பிடமாக கொண்ட மொஹம்மது அமீன் பாத்திமா அஸ்கா மாவனல்லை ஸஹிரா கல்லூரியின் பழைய மாணவியான இவரின் பெற்றோர்கள் இருவருமே ஆசிரியத்தொழில் புரிபவர்கள்.

சிறுவயதிலிருந்தே தான் ஊடகத்துறையில் சாதிக்க வேண்டும் எனும் அவா குடும்பத்தவர்களைப் பார்த்து அஸ்காவிடம்ஹ ஊறிக்கிடந்தது. காலப்போக்கில் அதனை மறந்து கல்வியில் உன்னிப்பாய் கவனம் செலுத்திய அஸ்காவின் விடாமுயற்சியினால் உயர்தரப்பரீட்சையில் மிகத்திறமையாக சித்தியடைய முடிந்தது. அதன் பின்னர் தனது பட்டப்படிப்பை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்தார்.

வீட்டிற்கும் பல்கலைக்கும் எட்டமுடியாத் தூரம் காரணமாக விடுமுறை நாட்களையும் அதிகம் விடுதியில் கழிக்க வேண்டி ஏற்பட்டதால் ஏதேனும் சாதிக்க வேண்டுமென எண்ணம் ஏற்பட கவிதைப் பக்கம் தன் கவனத்தை திருப்பினார் அஸ்கா. எந்த அறிமுகமும் இல்லா இத்துறை தனக்கு வருமா எனும் பயம் இருந்தாலும் பல்கலைக்கழக மாணவர்களின் கவித்திறமைகள் கண்டு தானும் இத்துறையில் சாதிக்க வேண்டும் எனும் அவா அஸ்காவை பின்நோக்கி நகர விடவில்லை.

கவிதைப்புத்தகங்களை பல்கலை நூலகத்தில் வாசித்தும் சக பல்கலைக்கழக சிரேஷ்ட எழுத்தாள மாணவர்களின் வழிகாட்டலிலும் **“பின்த் அமீன் “எனும் புனைப்பெயரில் கவித்துவத்தில் மி**ளிரத் தொடங்கி போட்டிகளிலும் கூட சிரேஷ்ட எழுத்தாளர்களை முந்திக்கொண்டு வெற்றி வாகை சூடத் தொடங்கினார்.

பல்கலைக்கழக நிகழ்வுகளில் மட்டுமன்றி பத்திரிகைகள், சஞ்சிகைகள் இணையதளங்களில் அவர் கவிதைகள் வரத்தொடங்கவே தன் இலக்கில் சாதித்ததாக எண்ணிக்கொண்டு இன்னும் உத்வேகத்துடன் எழுத ஆரம்பித்தார்.

பத்திரிகை நிருபராக, இணையவழி செய்தித் தொகுப்பாளராக எழுத்தாளராக என பல பரிணாமங்களில் ஊடகத்துறையில் கால்பதித்துள்ள இவர் தன் பட்டப்படிப்பினை முடித்துக்கொண்டவுடனேயே கடவுள் அருளால் ஆசிரிய சேவையிலும் இணைந்துகொண்டார். கவிதை, இலக்கியம் என்பன மன நிம்மதியை கொடுப்பதனால் என்றும் இத்துறையை விட்டுக் கொடுக்க மனம் இல்லாமல் தொடர்கிறார். பயிற்சி இல்லாமலே பலரும் புத்தகங்கள் வெளியிடத் தொடங்கியதால் நூலின் மதிப்பு இல்லாமல் போயிள்ளதாக உணர்வதால் புத்தகம் வெளியிடும் எண்ணத்தை கைவிட்டு இணையப் பரப்பில் எழுதி மிளிரும் கவிதாயினி அஸ்காவுக்கு அன்பு வாழ்த்துக்கள்.



## எதுவுமே இல்லை....! இல்லவே இல்லை

# இறக்காமம் கொக்குலான்கல் மக்களின் அவலம்

மனிதன் ஒருவன் நிம்மதியாக வாழ வேண்டுமாக இருந்தால் அடிப்படை வசதிகள் அவனுக்கு கிடைத்தாக வேண்டும். அடிப்படை வசதிகள் அற்று வாழும் மனிதன் தனது அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும். அடிப்படை வசதிகளற்று வாழ்நாட்களை கறடு முறடான பாதையில் பயணிப்பது போல் நகர்த்திச் செல்லும் குடியேற்றக் கிராம மக்களின் வாழ்வியலை சித்தரிக்கும் கதையே இது. இம்மக்களின் துயரம் துடைக்கப்பட வேண்டும். இவர்களின் விரக்திகள் அள்ளி வீசப்பட வேண்டும். நம்பிக்கை எனும் நெம்பு கொண்டு இவர்களின் வாழ்க்கையை நிம்மதியாக வாழ்வதற்கு நகர்த்தி விடப்பட வேண்டும்.

ஆம், கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம் இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள அறபா நகர், ஹாஜியார் புரம், கொக்குலான்கல் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் சுமார் 35 குடும்பங்களோடு வறுமையும் கூடவே வாழ்கின்றது. இக்குடும்பங்களில் அங்கம் வகிக்கின்ற சுமார் 150 இற்கு மேற்பட்டவர்கள் அனுபவித்து வரும் துயரங்களும், பிரச்சினைகளும் ஏராளம். சொல்லில் அடங்காத துயரங்களின் சொந்தக்காரர்கள் அவர்கள். இம்மக்கள் அனுபவிக்கும் துன்பத்தினை வார்த்தைகளில் சொல்லிவிட முடியவில்லை.

கடந்த 1999 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தனியானதோர் பிரதேச செயலகப் பிரிவாய் ஆரம்பிக்கப்பட்டு 12 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ள இறக்காமம் பிரதேசத்தின் ஏழாம் பிரிவிலேயே இக்குடியேற்றக் கிராமம் அமையப் பெற்றுள்ளது.

இறக்காமம் மத்திய பிரதேசத்திலிருந்து சுமார் பத்து கிலோமீற்றர் தொலைவில் எல்லைப் புறமாய் அமையப் பெற்றுள்ள இக்குடியேற்றக் கிராமம் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றம் பெற்றதாகும். அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வறுமையின் கோரப் பிடிக்குள் சிக்குண்டு வாழ்ந்து வந்த மக்களினாலேயே இக்கிராமம் தோற்றம் பெற்றுள்ளது.

மனிதனின் உயிர் வாழ்வுக்கு அத்தியவசியமாக தேவைப்படும் அடிப்படை வசதிகள் இல்லாமல் அம்பாறை மாவட்டத்தில் வாழ்ந்து வரும் கிராமத்தவர்களாக இங்கு வாழும் மக்கள் காணப்படுகின்றனர். தம் வயிற்றுக்காய் உணவினைத் தேடி பல கிலோமீற்றர் தூரம் சென்று கூலித் தொழில் புரியும் மக்கள் இங்கு பெரும்பான்மையாய் உள்ளனர்.



இவர்கள் துயரங்களின் சொந்தக்காரர்கள்....

வீசும் காற்றுக்கும், பெய்யும் மழைக்கும், எறிக்கும் வெயிலுக்கும் தாக்குப் பிடிக்க முடியாத பரிதவித்து வாழ்கிறார்கள் இங்குள்ள மக்கள். அணிவதற்கு போதிய உடை இல்லாமல் அல்லல் படுவதே இவர்களின் வழக்கமாய்ப் போய்விட்டது. ஆக உணவு, உடை, உறையுளற்ற அடிப்படைத் தேவைகளை எதிர்பார்த்திருக்கும் மக்களாகவே இங்குள்ளவர்கள் காணப்படுகின்றனர்.

அருந்துவதற்கு குடிநீர் இல்லை, பயணிப்பதற்கு பாதைகள் இல்லை, நோய் தீர்க்க வைத்திய வசதிகளில்லை, இயற்கைக் கடன்களை கழிப்பதற்கு முறையான சுகாதார கழிப்பிடங்கள் இல்லை. வீடுகளில் படுத்துறங்கும் போது பாம்புத் தொல்லை, நீர் நிலைகளில் குளிக்கச் சென்றால் முதலைகளின் அச்சுறுத்தல், மின்சார வசதியில்லை, பாடசாலைகளுக்குச் சென்று வர போக்குவரத்து வசதிகள் இல்லை, வாழ்வாதாரத்தினை துணையாக்கிக் கொள்ள தொழில்வாய்ப்பில்லை. இவ்வாறாக எதை எடுத்தாலும் இல்லை என்ற விடையுடனேயே இவர்களின் நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம், நிந்தவூர், அட்டாளைச்சேனை, பாலமுனை, அட்டப்பள்ளம், சம்மாந்துறை, அக்கரைப்பற்று, ஒலுவில் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் இக்கிராமத்தில் வசித்து வருகின்றனர். ஒற்றுமையுடன் வாழும் இம்மக்களுக்கென்று சொத்துக்கள் என்று சொல்லுமளவிற்கு எதுவுமில்லை. தனவந்தர் ஒருவருக்குச் சொந்தமான சுமார் இரண்டு ஏக்கரிற்கு மேற்பட்ட நிலப்பரப்பிலேயே இம்மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். மக்களின் துயரினைத் துடைக்கும் நன்நோக்கின் அடிப்படையில் ஒவ்வொரு குடும்பத்தவர்களுக்கும் தலா பத்து பேர்ச் நிலப்பரப்பினை நன்கொடையாய் வழங்கி இம்மக்களின் இருள் சூழ்ந்து காணப்பட்ட வாழ்வில் ஒளியினை ஏற்றி வைத்தார். ஆனால் இன்று வரை அம்மக்கள் வாழ்ந்து வரும் பிரசேத்தில் மின்சாரத்தினால் ஒளியேற்ற எவரும் முன்வராமல் இருப்பதே இங்கு அடிக்கோடிட்டுக் காட்டப்பட வேண்டிய விடயமாய் உள்ளது. தனவந்தர்கள் சிலர் அவ்வப் போது வழங்கும் சிறு சிறு உதவிகளாலேயே இவர்களின் நாட்களும் நகர்ந்து கொண்டிருக்கின்றன. கூலித் தொழில் புரிந்தும், குளத்து மீன்களைப் பிடித்தும் இவர்களின் வயிறு சற்றேனும் நிரம்புகிறது தினமும். வயலும்வயல்சார்ந்தமருதநிலத்தில்வாழ்ந்து வரும் இம்மக்கள் தாராளமாய்ப் பெற்றுக் கொள்வது இயற்கை காற்றை மட்டுமே.

இங்குள்ள 35 குடும்பத்தவர்களுக்கும் பொதுவாக இருப்பது ஒரே ஒரு மலசல கூடம் என்றால் இதை எத்தனை பேரால் ஏற்றுக் கொள்ள முடிகின்றதோ தெரியவில்லை. வயது வந்த எமது பெண் பிள்ளைகள் இரவு வரை மல சலம் கழிக்க காத்திருக்க வேண்டி அவல நிலை இருப்பதாக இங்குள்ள குடும்பத் தலைவிகள் சொல்லிக் கொள்ளும் போது அவர்கள் முகத்தினை கண்ணீர் கழுவிச் சென்ற அவலமும் எமது கண்களின் கமராக்களில் பதிவாகிய சோகமும் நிகழ்ந்தது.

இருள் சூழ்ந்து இப்பிரதேசதம் காணப்படுவதனால் காட்டு யானைகளின் அட்டகாசத்திற்கு அடிக்கடி இலக்காகின்றன. இவர்களது குடியிருப்புக்கள். இக்கிராமத்தினை அண்டிய பகுதியில் மலைக்குன்றுகளும், மரங்கள் நிறைந்த காட்டுப் பகுதியும் காணப்படுவதனால் காட்டு யானைகளின் தொல்லைகளும், காட்டு விலங்குளின் அட்டகாசங்களும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. அடிக்கடி இவர்களது குடியிருப்புக்களையும் பயிர் வகைகளையும் துவம்சம் செய்தும் வருகின்றன காட்டு யானைகள்.

இங்குள்ள மக்கள் தமது மதக் கடமைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியா அவலை நிலையும் இவர்களுக்குண்டு. தனவந்தர்களின் சிறு சிறு உதவியுடன் அரைகுறையாய் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறிய பள்ளிவாசல் இக்கிராமத்தின் ஓரத்தில் காணப்படுகின்றது. இதனை நிறைவு செய்வதற்காய் சில இலட்சம் ரூபா பணம் தேவையாக இருக்கிறது.

இந்நிலைமைகள் இவ்வாறிக்க, இப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் இள வயது சிறுவர்களின் நிலையை நினைக்கையில் கண்ணீர் பெருக் கெடுக்கின்றது என வயது முதிர்ந்த சிரேஷ்ட பிரஜை ஒருவர் கவலை கொண்டார் எம்மிடம். பாடசாலை செல்வதற்கு ஒரே ஒரு ஆடை. அதனை துவைப்பதற்கு படும் பாடோ மேடு பள்ளம் நிறைந்த பாதைகளால் பயணிக்க வேண்டும். இவ்வாறாக துவைத்து காலை வேளையில் சூரியன் உதிப்பதற்கு முன்னரே இம்மாணவர்கள் பாடசாலை நோக்கி பயணிக்க வேண்டும். இவர்கள் வசித்து வரும் பிரதேசத்தில் பாடசாலை இல்லை. பாடசாலைக் கல்வியினைத் தொடர வேண்டுமாக இருந்தால் இறக்காமம், குடுவில், வருப்பததான்சேனை போன்ற பிரதேசங்களுக்கே செல்ல வேண்டும். சுமார் 10 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பாடசாலைக்கு கால் நடையாக அரைவாசித் தூரத்தினை கடக்க வேண்டும்.

விஷ ஜெந்துக்களையும், பாம்புகளையும் அடிக்காமல் நாங்கள் இரவுகளில் நித்திரை செய்வதே இல்லை என இங்குள்ள சிலர் குறிப்பிடுகின்றனர். சில வேளைகளில் நாம் சமைக்கும் உணவுகளைக்



கூட எம்மால் உண்ண முடியாது போகின்றது. காட்டுப் பறவைகளும், வன விலங்குகளும் அதனை உண்டு விட்டு ஏப்பமிட்டுச் செல்கின்றன என்கின்றார்கள் சிலர். அன்றாடக் கூலித் தொழிலை செய்வதற்கு வெளியில் சென்று வருவதற்கிடையில் எமது ஆகாரங்களையும் காட்டு விலங்குகள் பதம் பார்த்து விடுகின்றது என்கின்றார்கள். இப்படியாக வேதனைகளோடும், சோதனைகளோடும் வாழ்ந்து வரும் எமக்கு உதவுவதற்கு அரசியல்வாதிகளும், தனவந்தர்களும் முன்வர வேண்டும் என அம்மக்கள் குறிப்பிடுகின்றனர்.

–முகம்மது றிஸ்வி–

# கவிஞர் குறிஞ்சிவாணன்

## மலையகத்தில் பூத்து திருக்கோவிலில் மனம் வீசிய கவிஞர்



வாரம் ஒரு படைப்பாளி

குறிஞ்சிவாணன் எனும் புனை பெயரில் எழுதிய பி.மாணிக்கம் பதுளை மாவட்டத்திலுள்ள **"தெமோதரை"** என்னும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அறுபதுகளில் இருந்து கவிதை எழுதிக்கொண்டிருந்தவர் . 1963 ல் எழுதத் தொடங்கிய குறிஞ்சிவாணன் அக்காலத்தில் **"மாக்ணி","அக்கரைப்பாமா", "சாகாமம் மணியன்"** போன்ற புனைபெயர்களிலும் கவிதை எழுதினார். மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அக்கரைப்பற்றில் சிலகாலம் வாழ்ந்து பின்னர் திருக்கோவில் பிரதேச சாகாமம் எனும் குடியேற்றக் கிராமத்தில் வசித்தவர் . தனது 18 வது வயதில் **"வெற்றி நமதே"** என்னும் தலைப்பில் வீரகேசரிக்கு தனது கன்னிக்கவிதையை எழுதினார். தொடர்ந்து தினபதி, சிந்தாமணி, ராதா, சுதந்திரன், செய்தி போன்ற பத்திரிகைகளில் இவரது 100 ற்கும் மேற்பட்ட கவிதைகள் பிரசுரமாகின.

1968 ல் **"கல்லச்சு இயந்திரம்"** ஒன்றைத் தயாரித்து அதன்மூலம் **"மலைக்கீதம்"** எனும் மெல்லிசைப் பாடல் தொகுதியொன்றை வெளியிட்டார். அடுத்து மலையக மக்களின் பிரச்சினைகளை மையமாகவைத்து **"தேனிசை"** என்ற பாடல்தொகுப்பைப் பிரசுரித்தார் 1991 ல் ஐரோப்பிய நாடான பெர்லின் நகரில் அமரர் **"நடேசையர்"** நினைவாக நடைபெற்ற தமிழ் இலக்கிய மகாநாட்டில் இவரது 50 கவிதைகள் பார்வைக்கு வைக்கப்பட்டன. அக்கரை மாணிக்கம், அமரர். கவிஞர் க.வடிவேல் ,கல்முனைப்பூபால், சி.கனகசூரியம் போன்றோருடன் கவியரங்குகளில் பங்கு கொண்டு சிறந்த கவிதைகள் பாடியுள்ளார். 1996 ல் திருக்கோவிலில் நடைபெற்ற சாகித்திய விழாவில் மறைந்த எழுத்தாளர் **"அன்புமணி"** அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். 1998 ல் வெளியான **"இன்னும் விடியவில்லை"** எனும் மரபுக் கவிதைத் தொகுதியில் இவரது கவிதைகள் உள்ளன. இவர் இறுதியாக 50 கவிதைகளைச் சேர்த்து ஒருநூலை வெளியிட்டார். தனது இறுதிக் காலத்தை திருக்கோவில்,சாகாமத்தில் கழித்த குறிஞ்சிவாணன் நோய்வாய்ப்பட்டு 2019 ம் ஆண்டு காலமானார். **இவரின் புகழ் நாமம் வாழட்டும்.**

**கோவிலூர் செல்வராஜன்.**

# தாய் நிலா

கலம்பகம்

**க.மங்களேஸ்வரி**



அது இதமான அந்திப் பொழுது. சந்திரன் சூரியனை வழியனுப்பி தன் சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்டது. அந்த நிலவைப் பார்த்தபடி இருண்ட இராத்திரிகளில் எத்தனை நாட்கள் சோகப் பெருமூச்சோடு அமர்ந்திருந்தாளோ தெரியவில்லை.

தன் பாட்டியின் வெற்றிலை இடிக்கும் சத்தம்தான் அவள் அருகில் யாரோ இருப்பதாக உணர்த்திக் கொண்டிருந்தது. கண்களில் கசியும் கண்ணீரைக் கூட துடைக்க நேரமில்லாதவளாய் அந்தச் சந்திரனை அன்பு கலந்த பார்வையில் உற்று நோக்கினாள். **"எத்தன நாளா இதையே யோசிச்சுக் கொண்டு இருக்க போறா?** அந்த காளியாச்சி உன்ட இந்த நிலமைக்கு காரணமானவங்களுக்கு நல்ல கூலி குடுப்பா... தப்பு செஞ்சவனே சந்தோஷமா இருக்கான். நீயேன் ராசாத்தி பழசையே நினைச்சு கவலப்படுறா? அந்தக் கடவுளுக்கு கண் இருந்தால் கூலி குடுப்பான். **" என்று புலம்பிய படியே சின்னமணிப் பாட்டி படுக்கைக்குச் சென்றாள்.**

ஒருகாலத்தில் கண் பார்வையற்ற தனது அப்பம்மாவான முனியம்மாக் கிழவியின் ஆதரவில் வளர்ந்தவள்தான் துர்க்கா. காலம் அவளை பெற்றோரிடமிருந்து பிரித்தே வைத்தது. அம்மாவிற்கு ஒரேயொரு பிள்ளை. துர்க்காவின் தாய் குடும்பப் பிரச்சினை காரணமாக நெருப்புக்கு இரையானதால் தாயின் முகமோ, அவளது அரவணைப்போ இன்றி வாழ்ந்தள். அதனால் வெகுளியாக வளர்ந்து விட்டாள். தந்தையும் விபத்தொன்றில் மாண்டு போனார். உறவென்று சொல்ல அவளுக்கு இருந்தது, அப்பம்மாவான முனியம்மாக் கிழவியும், அம்மம்மாவான சின்னமணிப் பாட்டியும்தான். சிறு வயதிலே தாயைப் பறி கொடுத்ததால் சரியான பராமரிப்பின்றி கைகளும், கால்களும் வலைந்த நிலையில் சரியாக நடக்க முடியாதவளாயும், சுயமாக சிந்திக்கத் தெரியாத மூன்று வயது குழந்தை போலவும் காணப்பட்டாள். ஆனால் அழகி. தனது தாயான வேலம்மாவின் பதினைந்து வருட தவத்திற்குப் பிறகு பெற்ற குழந்தைதான் துர்க்கா. அவள் சிரித்தால் தெத்துப் பற்களோடு, சிங்கப் பற்களும் சேர்ந்து விளங்கும். கன்னத்தில் குழி விழும். சுருண்ட கேசம். கருப்புத் தேகம்தான். ஆனாலும் கலையானவள். முனியம்மாக் கிழவி பார்வைகளற்றவளானதால், துர்க்கா பார்வையிருந்தும் இந்தச் சமூகத்தைப் பார்க்க மறந்தாள்.

தகரமும், காட்போட் பெட்டிகளினதும், ஆறு வரிச்சிக் கம்புகளினதும், அறைவாசிக்குப் பூசப்பட்ட புளொக் கற்களினதும் ஒத்துழைப்போடு கட்டப்பட்ட சிறிய கூடாரம்தான் அவள் வீடு. அவர்களின் நிலைமையைப் பார்த்தால் காகம் கூட சோற்றுக்காக வராது. அப்பம்மாவின் மாதாந்த ஓய்வூதியத்தில் மூன்று வாரங்களே சாப்பிட முடிந்த அவர்களால், மீதி நாட்கள் முழுவதும் தண்ணீர்தான் பசி தீர்த்தது. சிலவேளைகளில் யாரேனும் ஒரு சிலர் உணவு கொடுத்தால்த்தான். இல்லையென்றால் பட்டினிதான். இப்படி ஏழ்மையின் கோரத்தாண்டவத்தில் வாழ்ந்த துர்க்காவின் வாழ்விவை ஒரு கோரப் புயல் புரட்டிப் போட்டது. ஆம் அவளுக்கும் அநியாயம் நடந்தது.

அன்று பட்டப் பகல் வேளை. உஷ்ணம் உச்சியைப் பிளந்தது. சூடு தாங்க முடியாத முனியம்மா தனது கூடார வீட்டின் வாசலிலிருந்து சற்று விலத்தி அமர்ந்திருந்தாள். இருபத்தியொரு வயதாகியும் குழந்தை போலவேயிருக்கும் அந்தப் பரிசுத்தமான இதயம் கருகிய நாளும் அதுதான். அறுபது வயது நிரம்பிய முழுக் கிழடு அந்த ஊரிலுள்ள ஆறுமுகம். அவனைப் பார்த்தால் சின்னப் பிள்ளைகள் கூட பயந்து ஓடும். அப்டியொரு காம வெறியன். பெண்ணென்றால் படுக்கைக்கு மட்டும் போதுமென்று நினைப்பவன். துர்க்கா குளித்து விட்டு உடை மாற்றிக் கொண்டிருந்தாள். ஆறுமுகம் சமயம் பார்த்து வீட்டினுள் மெல்ல நுழைந்தான். கையில் விசுக்கொத்துப் பைக்கற்றைக் கொடுத்தவுடன் அதை தனது பகல் நேரச் சாப்பாட்டிற்குப் போதுமென்று நினைத்த அந்தக் குழந்தை, ஆறுமுகத்தின் காமப் பசிக்கு விருந்தானது.

என் ஈஸ்வரா .....! அங்குதான் மனிதத்தைத் தொலைத்திருப்போம். ஊனமான உடம்பினையும் வேட்டையாட நினைக்கும் இக் கயவனை எந்த மிருக இனத்தில் சேர்ப்பது? தனது தேவை முடிந்ததும் இரத்தக் கறை படிந்த அந்த சரத்தினை அவிழ்த்துக் கட்டிய படி வெளியேறினான். அம்மம்மா.... என்று கூட கதற முடியாத படி வாயை இறுக்கிக் கட்டியிருந்திருக்கிறான். மிகுந்த சிரமத்தின் மத்தியில் கட்டை அவிழ்த்த துர்க்கா. **"அம்மம்மா ....! வலிக்குது... வலிக்குது ..... ரத்தம் வருந்து ..... அந்த ஐயா .... அந்த ஆறுமுகம் ஐயா, என்ன என்னமோ செய்திட்டார். எனக்கு வலிக்குதுமா....** " என்று அந்தக் குழந்தை அழுதது. முனியம்மா கிழவி அவள் கூறிய விதத்திலே தன் பேத்திக்கு என்ன நடந்திருக்கும் என்பதைப் புரிந்து கொண்டு கதறி அழத் தொடங்கினாள். ஊரே கூடியது. ஆம் துர்க்கா கெடுக்கப்பட்டாள். துர்க்காவையும், முனியம்மாக் கிழவியையும் முச்சக்கர வண்டியில் ஏற்றிக் கொண்டு பொலிஸ் நிலைத்திற்குச் சென்றனர். ஊரே பரிதாபக் கண்ணீர் சொரிந்தது. பொலிஸ் அதிகாரிகள் ஆறுமுகத்தைக் கைது செய்தனர். துர்க்காவை வைத்தியசாலையில் அனுமதித்துப் பரிசோதனை நடத்தப்பட்டது. முடிவு துர்க்கா கெடுக்கப்பட்டது உண்மையானது. ஓய்ந்து போனது அந்த ஊமைக் குயில். ஆனால் ஆறுமுகமோ மூன்று நாட்கள் சிறை தண்டனையோடு வெளிவந்தான். தனக்கு நடந்த அநீதி போகப் போக அவளுக்குப் புரியத் தொடங்கியது. அந்த வீட்டை விட்டே வெளியேறி, தனது பாட்டியான சின்னமணி வீட்டில் அடைக்களமானாள். இரண்டு பாட்டிகளுமே துர்க்காவை உயிராய் நினைத்தவர்கள்தான். அவளுக்கு நேர்ந்த துன்பத்தை கடுகளவிலும் பொருத்துக் கொள்ள முடியாது கலங்கித் துடித்தனர். இந்த காயம் அவள் மனதில் வடுக்களாய் மாறியது.

ஒருநாள் ஏழு வயதில் **"அம்மம்மா! எல்லாருக்கும் அம்மா இருக்கு எனக்கு மட்டும் ஏன் இல்ல? அவங்க எங்க போய்ட்டாங்க?** " என்று முனியம்மாக் கிழவியைப் பார்த்து துர்க்கா கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல முடியாதவளாய், வானத்தைக் காட்டி அந்த நிலாவிலதான் உன்ட அம்மா இருக்காள். அவள் அங்க இருந்து உன்னை எப்போவும் பார்த்துக் கொண்டிருப்பாள். என்று அன்று முனியம்மாக் கிழவி சொன்ன அந்த வார்த்தைகளை நம்பினாள். ஒவ்வொரு நாள் இராத்திரியும் நிலவுக்காய் காத்திருந்து நிலா வந்தவுடன் அம்மா என்னையும் உன்னோடயே கூட்டிட்டு போயிருக்கலாம் தான... எனக்கு யாருமே இல்லாதனாலதான், என்னைய அந்த ஐயா தொட்டு ஏதோ செய்தாரு... வாமா... கெதியா வந்து என்னை கூட்டிட்டுப் போ.. என்று கண்ணீரால் தன் தாயுடன் கதைத்த படி ஒவ்வொரு நாளும் அந்த நிலாவைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.




குழந்தையாய் குதூகலத்துடன் குவலயத்தில் பிறந்த நான்
குமரியாய் பருவமெய்தியதும் குமுறல்களில் வளர்ந்த நான்
பேதையென்னை பெண்மகளாய் பார்த்தவர்கள் சிலர்
போதைகொண்டு உண்ண எண்ணி துரத்தியவர் பலர்

தாய்க்கும் தாயாய் குடும்பத்தில் செயற்பட்டேன்
தாரமிழந்த தந்தையும் தரக்குறைவாய் எண்ணி
தான்வளர்த்த மரந்தானே தனக்குரிமை என்றெண்ணி
பதம்பார்க்க பலமுறை பல் ,ழித்து முனைந்தானே

அரவனைப்புத் தேடி அண்ணனிடம் சென்றேன்.
ஆரத் தழுவி ஆறுதல் கூறுவாரென்றெண்ணிகூடப் பிறந்~
தவள் என்றும் பாராது
கூடல் கொள்ள முனைந்த கயவனானானே

வயது குறைந்த வல்லவன் தம்பியென்
றென்னிவாய் குழறி முறைப்பட்டு மடியில் விழுந்தால்
பாலினம் வயதுபாரா பார்ப்பது காமம் என்றே
ஆறுதல் தடவல் ,ன்றி ஆரத் தழுவ முயன்றானே

நட்புக்களில் நம்பிக்கை ,ழந்து
நாடினேன் நண்பனின் நிழலில்
தோழியென்றான் தோள்களைத் தடவி
ஆசைநாயகியாய் அமர்த்த எண்ணினானே

தரமான கல்வியதை தரணியில் பெறவெண்ணி
குருவான வித்தகனின் நிழலில் தஞ்சமடைய
மதிப்பான ஆசானும் மறுத்தால் எனது
மதிப்பெண்ணும் குறையுமென்றானே

பாழ்வயிறுப் பசிதீர்க்க வேலைத்தளம் விரைந்த எனக்கு
கால்வயிறுக் கஞ்சி நிரப்ப கனிவுடன் வந்த முதலாளி
ஓரிரவு உல்லாசமானால் உன்பசி தீர்ப்பேனென்று
உயிர்ப் பசி போக்க உடலை விலை பேசினானே

மனம்விரும்பி கரம் பிடித்த மையல் கொண்ட காதலனிடம்
மணம் முடிக்க மன்றாடி வரம் கேட்டேன்
பணம் கொடுத்தால் மணம் முடிப்பேன் ~தரமறுத்தால்
விலைமகளாய் விலைகொடுப்பேன் என்றானே

கதியிழந்து தவித்த எனக்கு வழியின்று வழிவகுத்த
கணவனும் கருணையின்றி கொடுமையால் கொழுத்தி
பணமெனும் பந்தியில் என்னைவைத்துவிட்டு
பகடையுருட்டி விற்றானே ஆடவரிடம் புத்திகெட்டு

பெண்ணென்று பிறந்திட்டால் பிணத்திடமும் காப்பு வேண்டும்
கற்பென்பது பெண்ணின்பால் காப்பது கடினமாம்
வற்றிப்போனது ,ப்போ கள்ளிப்பால்~ அதனால்
வதைக்கின்றனர் எங்களை கற்பழிப்பால்

மானிடரே பெண்மையின் துயர் தீரும்
பெண்ணவளே பிறப்பின் உயிர் மூச்சு
உறவுகளாய் பெண்ணின் கரம் பிடிப்போம்
உத்தமராய் அவளின் துயர் துடைப்போம்

ஆக்கம்
கவிஞர்
அருளானந்தம் சுதர்சன்
வீரமுனை ~ 04

# தர்மம் தலை காக்கும்

பிறக்கும் ஒவ்வொரு உயிரும் ஓர் நாள் இறப்பை சந்தி~க்க வேண்டும். ஆனால் வாழும் காலத்தில் வாழ்க்கை நிரந்தரம் போல வாழ்கின்றனர். தவறான வழிகளில் பணம் சம்பாதிக்கின்றனர், பெ~ண்கள் மற்றும் சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்கின்றனர், போதைப் பொருள் பாவனை, களவு, கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் போ~ன்ற பல்வேறு தீய செயல்களில் ஈடுபடுகின்றனர். சட்டம் மற்றும் தர்மம் போன்றவற்றுக்கு கட்டுப்பட்டு வாழ தவறுபவர்களின் வாழ்க்கை அழிவ~லே முடியும். எனவே எதிர்கால சந்ததிகளாவது இறை உணர்வோடு, கடவுள் பார்த்துக்கொண்டிருக்கிறார் நாம் செய்யும் பிளைக்கு கடவுள் தண்டனை தருவார் என்ற உணர்வோடு நேர் வழியில் வாழ பழகுங்கள். அப்போது தான் உங்கள் வாழ்க்கை ஒளிமயமானதாக அமையும்.

உதாரணமாக, ஒரு மனிதன் அரும்பொருட் காட்சி நிலையம் ஒன்றை அமைத்தார். அதிசயமான பல பொருட்களை சேகரித்தார். ஒரு நாள் கண்காட்சிக்கு பல்வேறு பிரபலங்க்களை அழைத்தான். அதில் ஒரு மகான் வந்திருந்தார். அவரிடம் சொன்னான் இதை பார்வையிட்ட பின்னர் இது பற்றி சான்றிதழ் தரவேண்டும் என்று கேட்டான். உலகிலே மிக சிறந்த அரும்பொருட் காட்சி நிலையம் இது என அவன் எதிர்பார்ப்புக்கு ஏற்றால் போல் சொன்னார் மகான். மிகவும் சந்தோஷத்தில் குதித்தான். உங்களு~க்கு நான் ஏதாவது அன்பளிப்பு தரவேண்டும் இங்குள்ள பொருட்க~ளில் எது வேண்டும் என்றாலும் எடுத்துக்கொள்ளுங்கள் என்றான். அதை கேட்ட மகான் சிரித்துக்கொண்டு நான் இறந்த பின் சொர்க்கத்தில் சந்தித்து வாழ்கின்றேன் எனக்கு ஒரு குண்டூசி மட்டும் கொண்டுவா என்று கூறின~ார். இதை கேட்ட மனிதன் சிரித்தான். நான் எப்போது இறப்பேன். நீங்கள் எப்போது இறப்பீர்கள். அதுவும் நாம் நிச்சயமாக சொர்க்கத்தில் தானா சந்~திப்போம். எப்படி குண்டூசியை கொண்டு வருவது என பல கேள்விகளை கேட்டான். அப்போது அந்த மகான் சொன்னார்.இப்போது விளங்குகின்றதா நாம் இறந்த பின்னர் ஒரு குண்டூசியைக்கூட கொண்டு செல்ல முடியாது. அதற்குள் நாம் எப்படி எல்லாம் பேராசை கொள்கின்றோம் என கூறினார்.

இப்படி தான் பலர் அதர்ம வழியில் வாழுகின்றனர். தீய செயல்களில் ஈடுபடுகின்றனர். நீர்க்குமிழி போல் நிலைநில்லாத இவ்வாழ்க்கையில் முடிந்~தவரை மற்றவர்களுக்கு உதவுங்கள். தர்ம காரியங்களை செய்யுங்கள்.

மங்கையர் மகுடம்
ஜெனிதா மோகன்




பன்ஹே கன்முதலிடம் பிடித்துள்ளது. டெல்லி, மும்பை முதல் 50 நகரங்களில் இடம் பிடித்தன. பிரிட்டன் தலைநகர் லண்டனை தலைமையிடமாக கொண்டு செயல்படும் 'தி எக்னாமிஸ்ட் குரூப்' ஊடக நிறுவனத்தின் புலனாய்வு பிரிவு சார்பில் ஆண்டுதோறும் உலகின் பாதுகாப்பான நகரங்கள் குறித்த பட்டியல் வெளியிடப்படுகிறது. இதன்படி 2021-ம் ஆண்டுக்கான பட்டியல் அண்மையில் வெளி யிடப்பட்டது. இதில் டென்மார்க் தலைநகர்கோபன்ஹேகன் முதலிடம் பிடித்தது. கனடாவின் டொராண்டோ, சிங்கப்பூர், சிட்னி, டோக்கியோ ஆகியவை அடுத்தடுத்த இடங்களை பிடித்தன. அமெரிக்காவின் நியூயார்க் நகருக்கு 12-வது இடம் கிடைத்தது.

பிரிட்டன் தலைநகர் லண்டன் 15-வது இடம், சீன தலைநகர் பெய்ஜிங் 36-வது இடம், ரஷ்ய தலைநகர் மாஸ்கோ 38-வது இடத்தைப் பெற்றன. இந்திய தலைநகர் டெல்லி 48-வது இடத்தையும், வர்த்தக நகரான மும்பை 50-வது இடத்திலும் உள்ளன.

# விடுகதைகள்

1. உடம்பில்லா ஒருவன் 10 சட்டை அணிந்திருப்பான் அவன் யார்?
விடை: வெங்காயம்

2. அடித்தாலும், உதைத்தாலும் அழ மாட்டான் அவன் யார்?
விடை: பந்து

3. யாரும் ஏறமுடியாத மரம், கிளைகள் இல்லாத மரம் அது என்ன?
விடை: வாழை

4. ஆயிரம் அறைகள் கொண்ட பிரம்மாண்டமான மிட்டாய் கடை அது என்ன?
விடை: தேன்கூடு

5. மூன்று பெண்களுக்கு ஒரே முகம். முதல் பொண் ஆற்றிலே, நடுப் பெண் காட்டிலே, கடைசி பெண் வீட்டிலே! அவர்கள் யார்?
விடை: முதலை, உடும்பு, பல்லி

6. கூட்டுக்குள்ளே கூடி இருக்கும் குருவியும் அல்ல, பாய்ந்து செல்லும் புலியும் அல்ல, எதிரியை கொள்ளும் வீரனும் அல்ல அது என்ன?
விடை: அம்பு

7. உதை வாங்கி, உதை வாங்கி ஊருக்கு சேதி சொல்வான் அவன் யார்?
விடை: தண்டோரா

8. வாள் இல்லாமல் கேடயம் மட்டும் எப்போதும் வைத்திருக்கும், போருக்கு போகாத வீரன் அவன் யார்?
விடை: ஆமை

9. பார்த்தால் கல், பல் பட்டாள் நீர் அது என்ன?
விடை: பனிக்கட்டி

10. வயிற்றில் விரல் சுமப்பான், தலையில் கல் சுமப்பான் அவன் யார்?
விடை: மோதிரம்


வெற்றிவேல் லக்சயா
தரம் – 10
கமு|சிவசக்தி மகா வித்தியாலயம்


ச.பியூமிஹா
தரம் - 05
யா \வேலணை தெற்கு ஐயனார் விச் தியாலயம்

## 6 ஆம் பக்க தொடர்ச்சி....



தமிழ் நாட்டில் 108 முகாம்களிலும், முகாம்களுக்கு வெளியே சுயமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய இலங்கையிலிருந்து குடிபெயர்ந்த தமிழர்களுக்காக நிவாரணங்களை அறிவித்து, அவர்களது இந்திய மற்றும் இலங்கை குடியுரிமைகள் குறித்து ஆராயக் குழுவையும் நியமித்துள்ளார். இது தொடர்பில் முழுமையாகத் தமிழக அரசுடன் ஒத்துழைக்கத் தயாராக உள்ளோம்.

தமிழகத்தில் வசிக்கும் இலங்கைத் தமிழர் நலன் சார்ந்த பல்வேறு அறிவிப்புகளைத் தமிழக முதலமைச்சர் சட்டமன்றத்தில் வெளியிட்டார். இதன்போது இலங்கை அகதிகளுக்கு 300 கோடிக்கு மேற்பட்ட நிவாரணங்கள் மற்றும் அகதிகளது இந்திய, இலங்கை குடியுரிமை குறித்து ஆராயக் குழு...

இவை இதற்கு முன்னால் இந்தளவு காத்திரமாக நிகழ்ந்திராத முன்னெடுப்புகள் ஆகும். 1983ஆம் ஆண்டு முதல் இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரங்கள் மற்றும் யுத்தம் காரணமாகத் தமிழகம் நோக்கி வந்த இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்திற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் உதவிகளைச் செய்துள்ளது.

**நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.**

ஈழத் தமிழர்களின் நலனுக்காகத் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் 317 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கும் நலத்திட்ட நடவடிக்கைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நன்றி தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் அகதி முகாம்களில் வசிக்கும் எமது ஈழத்தமிழர்களின் நலன் கருதி பல்வேறு நலத்திட்டங்களைத் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இது தொடர்பாகக் கூட்டமைப்பின் சார்பில் அவருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழ் நாட்டில் முகாம்களில் வாழும் ஈழத்தமிழ் அகதிகளுக்காகத் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னெடுக்க ஆலோசித்துள்ள அகதி முகாம்களில் வாழும் ஈழத்தமிழ் உறவுகளுக்கு நிரந்தரமான வதிவிட வசதிகளை ஏற்படுத்துதல், ஈழத் தமிழர்களின் எதிர்கால நலன் கருதிய வளர்ச்சித் திட்டங்களுடன் அவர்களின் உயர்கல்விக்கான உதவித் திட்டம் மற்றும் தாயகத்துக்கு மீளக்குடியமர விரும்புகின்றவர்கள் தொடர்பான தீர்மானங்களை முன்னெடுப்பதற்கான குழுவையும் அமைத்து ஆக்கப்பூர்வமாக நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார்.

**நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.**

ஈழத்தமிழர்களிற்காக தமிழக முதல்வர் ஸ்டாலின் எடுத்த நடவடிக்கைக்கு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நன்றி தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் அகதிமுகாம்களில் வசிக்கும் ஈழத்தமிழர்களின் நலன்கருதி பல்வேறு நலத்திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவருக்கு நன்றி தெரிவித்து அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

இந்தியாவில் தமிழ்நாட்டில் வாழும் ஈழத்தமிழ் அகதிகளுக்காக தமிழக முதல்வர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

நீண்டகாலமாக தமிழ்நாட்டிலே அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழ் உறவுகளுக்கு நிரந்தரமான வதிவிட வசதிகளையும், அவர்களுடைய எதிர்கால நலன் கருதிய வளர்ச்சித் திட்டங்களையும் அறிவித்துள்ளீர்கள்.

அத்துடன், நம்முடைய சந்ததிகளின் உயர்கல்விக்கான உதவித் திட்டத்தையும் மற்றும் இலங்கையில் மீள குடியமர விரும்புகின்றவர்கள் தொடர்பான தீர்மானங்களை முன்னெடுப்பதற்கான குழுவினையும் அமைத்து ஆக்கபூர்வமாக நடவடிக்கையை நீங்கள் முன்னெடுத்திருக்கிறீர்கள்.

முதன்முறையாக தமிழ்நாடு சட்டசபையில் ஒரு முதல்வர் இப்படியான திட்டங்களை அறிவித்ததோடு அதற்கான நிதி ஒதுக்கீட்டையும் வழங்கி ஆக்கபூர்வமான செயல் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தி இருப்பதற்கு தங்களுக்கு எமது மக்கள் சார்பாக உளம் கனிந்த நன்றியையும் தங்களது நல்லாட்சி தொடர்வதற்கு வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன் என்றுள்ளது.

## 4 ஆம் பக்க தொடர்ச்சி ......

வரலாற்று நாடகங்களாக கடலோரக் காரிகை (விஜயன் குவேனி சரிதை) வஞ்சியை வென்ற வஞ்சகன், சமூக நாடகங்களாக அவளின் பாதை தெய்வத்தின் வழியில் என்பனவாகும்.

**மட்டக்களப்பு மண்ணில் சுமார் அரை நூற்றாண்டு காலமாக கூத்துக் கலையை பேணிப் பாதுகாப்பதில் நிறைவான பங்களிப்பு நல்கியவர்களுள் தாங்களும் ஒருவர் என்ற வகையில் என்ன கூறுகின்றீர்கள்.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் வடமோடிக் கூத்து, தென்மோடிக் கூத்து என்பன ஆடப்பட்டு வருகின்றன. நான் தென்மோடிக் கூத்துக்களை எழுதி கிராமப் புறங்களிலில் மட்டுமன்றி நகர்ப் புறங்களிலும் அரங்கேற்றியுள்ளேன். அந்த வகையில் கிறிஸ்துவின் வருகை, சுவடுகள், புனித யோசோவாஸ் சரிதை, வீர அபிமன்னன், பாசுபதம், பணம் படுத்தும் பாடு, பொல்லாத பொறின் ஆசை, கல்வியின் பெருமை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**தொலைக்காட்சி நாடகங்களில் உங்களது ஈடுபாடு பற்றி கூற முடியுமா?**

இலங்கை ரூபவாஹினியின் நேத்திரா அலைவரிசையில் ஒளிபரப்பான 'ஒரு சின்ன முத்தம் எனும் தொலைக்காட்சி நாடகத்தை எழுதி, நெறியாள்கை செய்து, நடித்துள்ளேன்.

**குறுந்திரைப்படங்களில் நீங்கள் ஈடுபாடு காட்டவில்லையா?**

அதிலும் கால்பதித்துள்ளேன். மூத்த ஒலிபரப்பாளர் அருணா செல்லத்துரையின் வீடு எனும் நூலை அடியொற்றி தயாரித்த பட்டமரம் விட்டதுளிர் மற்றும் அம்மா, சாம்ராட் அசோகன் சோக்ரட்டீஸ் போன்ற குறுந்திரைப்படங்களை எழுதி, நெறியாள்கை செய்து நடித்துள்ளேன்.

**கவிதை துறையில் உங்களின் பங்களிப்பு என்ன?**

பதில் : மாணவப் பருவம் முதல் இன்றுவரை பல நூற்றுக்கணக்கான கவிதைகளை எழுதியுள்ளேன். எனது கவிதைகள் தினக்குரல், வீரகேசரி பத்திரிகைகளிலும் தொண்டன், சுவைத்திரன், மாமருதம் ஆகிய சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளதுடன், வானொலியிலும் பல கவிதைகள் ஒலிபரப்பாகியுள்ளன. அன்னை தெரசாவின் வாழ்க்கை சரிதை கூறும் அன்பின் அரசி அன்னை தெரசா எனும் அம்மானை காவியம் நூலுருவாக்கம் பெற்றுள்ளது. மூன்று பாடசாலைகளுக்கான பாடசாலைக் கீதங்களையும் எழுதியுள்ளேன். அத்துடன் இயேசு கிறிஸ்துவின் வரலாற்றை கூறும் பல பாடல்களை எழுதியுள்ளேன்.

**சிறுகதைத் துறையில் உங்களது நாட்டம் எவ்வாறு?**

பல சிறுகதைகளை அவ்வப்போது எழுதியுள்ளேன். இவற்றுள் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளை ஷஷ அமேசன் காட்டில் அழகன் பூசாரி என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளேன். இதற்கு 2016ம் ஆண்டில் கொடகே விருது கிடைத்துள்ளது.

**நாடக எழுத்தாளரான உங்களது எழுத்துக்கள்நூலுருவாக்கம்பெற்றுள்ளதா?**

ஆம் 2018ல் எனது நாடகங்கள் பலவற்றை ஒன்று திரட்டி உண்ர்வுகள் என்ற பெயரில் வெளியிட்டேடன். இதற்கு கிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2018 இல் முதல் பரிசு கிடைத்துள்ளது.

**சாரணிய அமைப்பில் உங்களது பங்களிப்பு பற்றி குறிப்பிடமுடியுமா?**

நான் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் கல்வி கற்ற காலம் தொடக்கம் இன்றுவரை என சாரணியப்பணி தொடர்கின்றது. 1960ம் ஆண்டு சாரண மாணவனாக இவ் அமைப்பில் இணைந்த நான் சாரண தலைவர், உதவி மாவட்ட ஆணையாளர், மாவட்ட சாரண ஆணையாளர் (05 வருடம்) என எனது பங்களிப்பு இருந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவினால் சாரணருக்கான உயர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டேன்.

**கல்வி, கலை இலக்கயம், சாரணயிம் சமுகப் பணி என பல துறைகளில் கால்பதித்து பிரகாசிக்கும் உங்களின் வழிகாட்டி யார்?**

முதலில் எனது பெற்றோர், மற்றும் எனது பாடசாலை ஆசிரியரான காலஞ்சென்ற அதிபர் வித்துவான். சா. இ. கமலாநாதன், எனது உறவினாரான மூத்த இலக்கிவாதி, கவிஞர் செ. குணரெத்தினம் போன்றோர் எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ளனர்.

**தேசிய ரீதியில் கலாபூசனம் விருதினையும் மாகாண ரீதியில் வித்தகர் விருதினையும் பெற்ற நீங்கள் உங்களது பெயரின் முன்னால் இவற்றைத் தவிர்த்து கலைஞானி, கலைக் கோட்டன் என்று குறிப்பிடக் காரணம் என்ன?**

கிறிஸ்துவின் இரவு என்ற நாட்டிய நாடகத்தை எழுதி அரங்கேற்றிய போது திருகோணமலை மட்டு யேசு சபை விருதாக வணபிரதா போல் சற்குணநாயகம் ஷஷகலைஞானி விருது வழங்கி கௌரவித்தார். நீ எதிர்கொண்டேன் நாட்டிய நாடகத்தில் நடித்ததைப் பாராட்டி மட்டு மறை மாவட்ட வண பிதா ஜோசப் மேரி கலைக் கோட்டன் என்று பாராட்டிக் கௌரவித்தமை பெரும் பேறாகக் கருதியமையாகும்.

**இன்றை இளம் படைப்பாளர்கள் கலைஞர்களுக்கு நீங்கள் இறுதியாக என்ன கூறு முற்படுகின்றீர்கள்.**

ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்பு என்பது சம்பவம், ஆனால் அந்த மனிதனின் இறப்பு என்பது சரித்திரமாக வேண்டும். வெறுமனே பிறந்தோம் வாழ்ந்தோம் மறைந்தோம் என்பதாக இல்லாமல் நாம் எமக்காக மட்டுமன்றி பிறருக்காகவும் வாழ வேண்டும். அந்த வாழ்க்கை வரலாறாக வேண்டும் என்பதுதான் என்றார்.

## 03ஆம் பக்க தொடர்...

# தொற்றுள்ள தாய்மாரும் குழந்தைகளுக்கு பாலூட்டலாம்

பரிச தொடுகை உறவு இல்லாத குழந்தைகளுக்கு, வளர்ச்சியிலும், உளவியலிலும் பல மாற்றங்கள் தென்படுவதாக கருதப்படுகின்றது. துக்கம், மனவேதனை, மகிழ்ச்சி போன்ற மாறுபட்ட தாயின் உணர்வுகள் பாலூட்டும் போது பிள்ளையின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதையும் உணர்கிறோம்.

ஆகவே, பாலூட்டுதலை தவிர்ப்பதனால் இயற்கையாக பெறும் பல வரப்பிரசாதங்களை இழக்க நேரிடும் என்பதற்காகவே தாய்ப்பால் ஊட்டுவதை உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைக்கின்றது. இருப்பினும், கொரோனா தொற்றும் நிலையில் எவ்வாறு பாலூட்டுவது என்பதுதான் இப்போதைய பிரச்சினை. ஆனால், அதற்கான வழிகளையும் சிறுபிள்ளை வைத்திய நிபுணர்கள், மகப்பேற்று நிபுணர்கள், ஆய்வாளர்கள் போன்றவர்களும் பரிந்துரைக்கின்றனர்.

இதேவேளை, அரச வைத்தியசாலைகளிலும் விசேட பயிற்சி பெற்ற சேவையாளர்கள் இதற்கான வழியை செயல்முறை மூலம் வழிகாட்டி வருகின்றனர்.

இத்தொற்றானது எவ்வாறு பரவுகின்றது என்பதனை தாய்மார்கள் உணர்வதன் மூலமும், தடுப்பதற்கான வழிகளை உணர்ந்து கொள்வதன் மூலமும் தொற்றின் போது அதற்கான முன் ஆயத்தங்களுடன் பாலூட்ட முடியும்.

பால் ஊட்டும் வேளையில் இரட்டை முக கவசம் அணிவது , அதுவும் வைத்தியர்களினால் பரிந்துரைக்கப்பட்ட முகக்கவசங்களை அணிவதும், அணியும் முறையும் இங்கு முக்கியமாகின்றது. முற்று முழுதான சுவாசமும் முகக்கவசத்தின் ஊடாகவே நிகழும் வகையில் அணியப்பட்டிருக்க வேண்டும். முகக்கவசமானது தரமானதாகவும் ஓட்டைகள் காற்றுப்புகும் இடைவெளிகள் இல்லாததையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். தொற்றின் போது ஏதோ ஒரு வகையில் உடலில் தொடுகையினால் கிருமிகள் பரந்து காணப்படலாம், அதனால் பாலூட்டும்போது குழந்தை உறிஞ்சும் பகுதியிலும், அதன் சுற்றுப்புறத்திலும் தொற்று நீக்கிக் கொள்ளுதல் அவசியம். அத்துடன் பாலூட்டும் முன்பும் பாலூட்டிய பின்பும் கைகளையும் தொற்று நீக்கி கொள்ளலாம். (நன்றாக கழுவுதல்) மற்றும் தாய்ப்பாலூட்டலின் நன்மைகள் என்ன என்பது உங்களுக்கு முக்கியமானது.

தாய்ப்பாலூட்டலினால் தாய் சேய் உறவு வலுப்பெறுகின்றது. இதன் வாயிலாக குழந்தை இந்த உலகில் அனைத்தையும் எதிர்கொண்டு வாழும் இயல்பைப் பெறுகின்றது. குறிப்பாக நோய் எதிர்ப்பு சக்தி, மனவலிமை, பேச்சுத்திறன், சிரிப்பு, மூளை வளர்ச்சி, வயதிற்கேற்ற வளர்ச்சி, எதிர்காலத்தில் ஆரோக்கியம், உணவு உண்ணும் இயல்பு இவ்வாறான இயல்புகளுடன் சமூகத்துடன் சேர்ந்து ஒரு நற்பிரஜையாக வாழவும் வழி வகுக்கின்றது. ஆனால், தாய்ப்பாலை தவிர்த்துக் கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குழந்தையின் வளர்ச்சி, மனவலிமை போன்ற சமுதாய நீரோட்டத்தில் இயல்பாகவே நடைபோடும் திறன் இழக்கப்படலாம் எனவும் கூறப்படுகின்றது.

எனவே,எந்நிலையிலும் தாய்ப்பாலூட்டல், அணைத்தல், ஆதரித்தல் என்பன குழந்தையின் எதிர்கால வளர்ச்சிக்கும் வாழ்க்கைக்கும் இன்றியமையாதது.



# ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய சுதந்திர தேசமாக பிரகடனம்

## தலிபான் அரசுடன் ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்த முக்கிய நாடுகள் சில முஸ்தீபு.

### தலிபான்களை தொடர்ந்தும் ஆபத்து மிக்கவர்கள் என்று கருத முடியாது– பிரிட்டன்

ஆப்கானிஸ்தான் அரசாங்கத்துடன் இராஜதந்திர உறவுகளை ஆரம்பிப்பதற்கு சிரேஷ்ட நாடுகள் முன்வந்துள்ளன. அயல் நாடுகளான பாகிஸ்தான்,ஈரான்,இந்தியா மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகள் இவ்வாறான உறவுகளை ஆரம்பிப்பது பற்றி ஆலோசித்து வரும் நிலையில்,கட்டார் அரசாங்கம் உத்தியோக பூர்வமாக இதற்கான விருப்பத்தை வெளியிட்டுள்ளது.

கட்டாரின் வெளிநாட்டமைச்சர் அப்துர்ரஹ்மான் அல்தானி மற்றும் பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் ரொமினிக்டெப் ஆகியோர் கடந்த வியாழக்கிழமை (02) கூட்டாக நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் இதுபற்றி கட்டார் வெளிநாட்டமைச்சர் அறிவித்தார்.

எனினும், இதில் கலந்து கொண்ட பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் தலிபான் அரசாங்கத்துடன் உறவுகளை ஆரம்பிப்பது குறித்து எந்தக் கருத்துக்களையும் வெளியிடாவிடினும்,"தொடர்ந்தும் தலிபான்களை ஆபத்துமிக்கவர்களெனக் கருத முடியாதெனத் தெரிவித்தார்".

கட்டாரின் தலைநகர் டோஹாவில் நடந்த இந்த ஊடக மாநாட்டில் கருத்து வெளியிட்ட வெளிநாட்டமைச்சர் அப்துர்ரஹ்மான் அல்தானி காபுல் விமான நிலயத்தை புனரமைக்கும் பணிகள் பூர்த்தியானதும் சர்வதேச அளவிலான விமானப் போக்குவரத்து ஆரம்பிக்கப்படும். இதற்கான தொழினுட்ப உதவிகளை துருக்கி அரசாங்கம் வழுங்க முன்வந்துள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது.ஆப்கானிஸ்தான்,வளைகுடா நாடுகளுடன் உறவுகளைப் பலப்படுத்தும் காலம் கனிந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

இதுபற்றிக் கருத்து வெளியிட்ட பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் தீவிரவாதச் சிந்தனைகளுள்ள எந்த அரசாங்கத்தையும் பிரிட்டன் ஏற்றுக் கொள்ளாது.எனினும், ஆபத்துமிக்கவர்கள் எனத் தலிபான்களைத் தொடர்ந்து கருத முடியாதெனவும் குறிப்பிட்டார். இந்நிலையில்,ஒகஸ்ட்15 இல் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர், உணவுப் பொருட்களின் விலை ஐம்பது வீதத்தால் அதிகரித்துள்ளதுடன் எரி பொருட்களின் விலையும் 75 வீதத்தால் அதிகரித்துள்ளன. இந்நிலைமைகளைச் சமாளிப்பதற்கு எண்ணெய் வள நாடுகளுடன் உறவுகளை ஏற்படுத்துவது,தலிபான் அரசாங்கத்துக்கு தற்போது அவசியப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இருபது வருடப் பிரசன்னம் நிறைவடைந்ததையடுத்து, இஸ்லாமிய சுதந்திர தேசமாக ஆப்கானிஸ்தானை தலிபான்கள் அறிவித்துள்ளனர்.இந்த அரசாங்கத்தை சர்வதேசம் ஏற்றுக்கொள்வதா?இல்லையா?என்பது தலிபான்களின் நடத்தையில் தங்கியுள்ளது. ஆப்கானிஸ்தானில்,ஆட்சியிலிருந்த தலிபான்கள் 2006 இல்,ஆசியாவின் புகழ் மிக்க "பார்மியான் பௌத்த சிலைகளைத் தகர்த்து மத அடிப்படைவாத அரசாங்கத்தை பறைசாற்றினர்.இந்த அரசாங்கத்தின் ஆபத்தை உணர்ந்த மேலைத்தேயம், நேட்டோ தலைமையில் ஆப்கானிஸ்தானில் படையெடுத்து ஆட்சியிலிருந்த தலிபான்களை அகற்றினர். எனினும்,அமெரிக்க சார்பிலான ஆப்கான் அரசாங்கத்தைக் காப்பாற்றும் பொருட்டு சுமார் இருபது வருடங்கள் அமெரிக்கத் துருப்பினர் நிலைகொண்டிருந்தனர்.இந்தப் படைகள் வெளியேறிய தினத்தைக் கொண்டாடிய தலிபான்களின் உணர்வுகள், ஆக்கிரமிப்பு படைகள் வெளியேறிய சந்தோசத்தையே வெளிப்படுத்தியிருந்தது. இதற்குள்,ஆப்கானிஸ்தைானை அண்டியுள்ள அயல்நாடுகளும் தலிபான்களுடன் உறவை ஏற்படுத்துவது குறித்து ஆலோசித்து வருகின்றன.

# 30 இலட்சம் தடுப்பூசிகளை நிராகரித்தது வடகொரியா



சீனாவிலிருந்து வந்த 30 இலட்சம் கொரோனா தடுப்பூசிகளை வட கொரியா நிராகரித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதுகுறித்து சர்வதேச ஊடகங்கள், "சீனாவிலிருந்து கொரோனா பரவுகிறது என்ற தகவல் வெளியானவுடன் முதல் நாடாக நாடு முழுவதும் ஊரடங்கை அறிவித்தது வடகொரியா. இதுவரை வடகொரியாவில் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் உறுதிப்படுத்தாத நிலையில், கொரோனா தடுப்பூசிகளை வட கொரியாவுக்கு சீனா வழங்கி வந்தது. இந்நிலையில், சீனா வழங்கிய சுமார் 30 இலட்சம் சினோவாக் கொரோனா தடுப்பூசிகளை வடகொரியா நிராகரித்துள்ளது. வடகொரியா நிராகரித்த கொரோனா தடுப்பூசிகள் கொரோனாவால் அதிகமாக பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு வழுங்கப்பட உள்ளன" என்று செய்தி வெளியிட்டுள்ளன. இந்தச் செய்தியை யுனிசெஃப் அமைப்பும் உறுதி செய்துள்ளது. டெல்டா வைரஸ் காரணமாகப் பல நாடுகளில் கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது. பிரிட்டன், ஜெர்மனி, ஸ்வீடன், பிரான்ஸ், தென்கொரியா ஆகிய நாடுகளிலும் அதுவே எதிரொலிக்கிறது என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். கரோனா வைரஸ் பாதிப்பு அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, இந்தியா, பிரேசில், பிரான்ஸ், ரஷ்யா ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளன. உலக அளவில் கொரோனா பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 21 கோடியைக் கடந்துள்ளது. அதேசமயம் கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து 19 கோடிக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர். கொரோனா தொற்று ஏற்பட்டு இதுவரை 45 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.



# அமெரிக்காவில் 'இடாப்புயல்' தாக்கம்: 45 பேர் உயிரிழப்பு

## தொடர்ந்தும் அப்பாய எச்சரிக்கை விடுக்கிறது அரசு

அமெரிக்காவில் வட கிழக்கு மாகாணங்களில் 'இடா' புயலால் கனமழை பெய்து வருகிறது. மழை வெள்ளத்தால் பல்வேறு மாகாணங்கள் பாதிக்கப்பட்டு உள்ளன. இதுவரை 45 பேர் உயிரிழந்திருப்பதாக பிந்தி கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமான நிலையங்கள் மூடப்பட்டு நியூயோர்க் மற்றும் நியூஜெர்சியில் அவசர நிலை பிரகடனம் அறிவிக்கப்பட்டுள்ளது. தெற்கு மாகாணமான லூசியானாவில் புயல் மற்றும் சூறாவளியால் தீவிரமான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மாகாணத்தின் வடக்கு பகுதிகள் கடுமையாகப் பாதிப்படைந்து உள்ளன.

நியூயோர்க் நகரின் ஆளுகையின் கீழ் வரும் புரூக்ளின் மற்றும் குயின்ஸ் பகுதி வெள்ளத்தால் சூழ்ந்த நிலையில், அவசர நிலை பிரகடனத்தை நியூயோர்க் கவர்னர் கேத்தி ஹோச்சுல் அறிவித்துள்ளார். இதையடுத்து, நெவார்க், லாகார்டியா மற்றும் ஜேஎப்கே ஆகிய பகுதிகள் அருகே அமைந்துள்ள விமான நிலையங்களில் விமான சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது. மன்ஹாட்டன், தி பிராங்க்ஸ் மற்றும் குயின்ஸ் ஆகிய நகரங்களின் முக்கிய சாலைகள் மூடப்பட்டுள்ளது.

நியூயார்க் நகரத்தின் அவசர அறிவிப்பு அமைப்பு டுவிட்டர் பக்கத்தில், 'மக்கள் அனைவரும் வீட்டிலேயே இருங்கள். பலத்த காற்றால் சிதைந்த பொருள்கள் பறந்துவந்து மக்களை தாக்க வாய்ப்புள்ளது. முடிந்த அளவுக்கு கீழ் தளங்களில் இருங்கள். ஜன்னல் அருகே நிற்க வேண்டாம்' என பதிவிடப்பட்டு உள்ளது.அமெரிக்காவில் 'இடாப்புயல்' தாக்கம்:கனமழை,வெள்ளம்

தொடர்ந்தும் அபாய எச்சரிக்கை விடுக்கிறது அரசு அமெரிக்காவில் வட கிழக்கு மாகாணங்களில் 'இடா' புயலால் கனமழை பெய்து வருகிறது.